57

57

167

131

131

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஏ.ஆர்.என். பெருமாள் செட்டியார்,

சீராபள்ளி P.O, ராசிபுரம் தாலுகா,

சேலம்.

"ஜைக முறை அட்டவணை"

(1 முதல் 38-வரை சிறிய கட்டுகள்

அடங்கியவை.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

131

Verification completed on 8.10.63

Total typed page 39.

[signature]

8.10.63.

Sir,

[illegible]

[illegible] 28-12-63.

21.1.64.

[signature]

7/2/64

தேதி:- 19.9.63.
புத்தகத்தின் பெயர்:-"கை முறை வைத்தியம்" (1-முதல் 38-வரை சிறிய கட்டுகள்)
உரிமையாளரின் பெயர்:- பெருமாள் செட்டியார்,
இடம்:- ராசீபுரம், சீராபள்ளி, சேலம்.

கண் தெரியாதத்திற்கு மருந்து:-

இந்துப்பு, மரமஞ்சள், மனோசீலை, சுக்கு, மிளகு, திப்பிலி, சரியிடையாக பாலிலரைத்து கயறு செய்து கண்ணீரில் அரைத்து போட்டு வரவும். நன்மையுண்டாகும். கண் மங்கிப் போறதுக்கு இந்துப்பு, சதகுப்பை, சங்கு, மனோசிலை, கடல் நுரை, மிளகு செங்கல்பொடி, ஓரளவாய் எலுமிச்சம் சாறு விட்டு அரைத்து கயறு செய்து ஆவின் நெய்யில் போடவும்.

2. கடல் நுரையும், வெள்ளை, கல்கண்டும், சரியிடையாக அரைத்து தேனில் குழைத்துப் போட்டு வரவும் தீரும். கண் மங்கி யிருப்பதுக்கும் இந்த மருந்தை தலையில் தேய்த்து நிதம் தோசம் ஸ்நானம் செய்து வந்தால் பகலில் நட்சத்திரத்தை பார்க்கலாம். நல்ல வெளிச்சமுண்டாகும்.

கண்மந்தம், பித்தம், நீர்ப் பாய்ச்சலுக்கு தைலம்:-

சந்தனம், அதிமதுரம் வகைக்கு புலம்.௧, சேர்த்து கத்தாளஞ் சோறு ஒரு படி ஆவின் பாலில் அரைத்துக் கொதிக்க வைத்து அமுக்கி தலைக்குத் தேய்க்கவும் தீரும். தண்ணீர் வார்க்கவும். கண்ணீர் நீர் பெருகி வெள்ளை படர்ந்து நீர் கோர்த்து கண் வீங்கி கடுத்து வலிக்கும். பீளை கட்டும். நிவர்த்தி. வெள்ளைக் குன்று மணி பருப்பும். இதின் வேரும் வெள்ளைக் காக்கட்டாம் பூவும் அதின் விரையும் முலைப் பால் வார்த்தரைத்து கயறு செய்து தேனிலுரைத்துக் கண்ணில் போடவும். நன்மை யுண்டாகும்.

பலரோகங்களில் குணம்:-

கண்ணில் சவ்வு மூடி ரெத்தங் கட்டி இழமாடி போலிருக்கும். இதற்கும் மருந்து: சீரகத்தை அரைத்து கண்ணில் போட்டு தேய்க்க ரெத்தம் போக்கி மேற்கண்ட புளியந் தளிரை யிடித்து சாறு பிழிந்து கொதிக்க வைத்து மூன்று நாளுக்கு கண்ணைச் சுத்தி வளையம் போடவும். சுத்தம், அரிசி இந்துப்பு, சரியிடையாக உப்பிலியன் கொடி சமூலம் இடித்து சாறு பிழிந்து அரைத்து குழம்பு போல் காய்ச்சி நெய்யும் தேனும் விட்டுக் குழைத்து கண்ணுக்குப் போட்டு வரவும். நன்மை உண்டாகும்.

கண் மங்கலுக்கு, கண் குறுகுக்கு; மந்தம் இருக்கப் பட்டதுக்கு தீரும் மாத்திரை:-

இந்துப்பு, திப்பிலி, பீநாரோகணி இவைகள் சரியிடையாக இடித்துப் போட்டு நந்தியா வட்டம் பூவுச் சாத்திலரைத்து கயறு செய்து காய வைத்து கண்ணில் மேற்கண்ட நந்தியா வட்டம் பூ சாத்திலரைத்துப் போடவும். பச்சைக் கற்பூரத்தை நெய்யில் ஊறப் போட்டு அவ்வியை நனைத்து கண்ணில் போடவும். பெருங்காயமும் சீரகமும் பொடி செய்து நெருப்பின் மேல் தூவி கண்ணில் புகைபிடிக்கவும். ~~[illegible]~~

கண்ணீர் நீர் வருகிறதுக்கு:-

தேள் கொடுக்கு யிலையைக் கசக்கிக் கண்ணில் பிழிய நல்லது.

மிறண்ட கண்ணுக்கு:-

சுத்தம், கருசு, சாட்டறனை வேர், பலகறை, சரியிடை எலுமிச்சம் சாத்திலரைத்து புளியம் இலை சாத்தில் போடவும்.

கண் தெரியாத பேர்களுக்கு மருந்து:-

ஆடு தீண்டா இலை சாறு, ஆவாரம் யிலைச் சாறு, மணத்தக்காளி சமூலம் சாறு வரிக் கத்தாளைச் சாறு, நல்லெண்ணை படி.௧, பால் படி.½, கோஷ்டம் மட்டிப் பால் அதிமதுரம், விலாமிச்சம் வேர், வெட்டி வேர், ஏலம் வகைக்கு பலம்.¼ பதமாக காய்

ச்சி முழுகவும். நல்லது ஆகும். கண்ணில் சிகப்பு படர்ந்து இருக்கிறதுக்கு:-

வரிப்புலாம் வேரை அரைத்து முலைப் பாலில் கலந்து கண்ணில் பிழியத் தீரும்.

கண் மங்கலுக்கு:-

அதிமதுரத்தை அரைத்து நெய்யில் போட்டுக் காய்ச்சி கண்ணில் ஊத்தி வரவும்.

கண் மங்கலுக்கு:- வெங்கலப் பொடி தலை ஓடு, செங்கச்சம் கல் பொடி, துத்தம், இந்துப்பு, சரியிடையாக எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து வெண்ணை கூட்டி களிம்பு செய்து போடவும்.

கண்ரோகம் குருடு மங்கல்:- சுக்கு மிளகு, திப்பிலி, துத்தம், செஞ்சந்தனம், வெள்ளை சாட்டறணை வேர், தாமரைத் தளை, பச்சைக் கற்பூரம் சரியிடையாக முலைப்பால் விட்டு அரைத்து கயம் செய்து ஆவின் பாலில் உரைத்துப் போட நன்மை தரும்.

கண் ஒழுக்குக்கு:- அஞ்சனக்கல், கோழி முட்டைத் தோல், சங்கு, திப்பிலி, சந்தனம், தலை ஓடு, சரியிடையாக எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து கயம் செய்து கண்ணுக்குப் போடவும்.

கண் குருடு தெரிய மருந்து:- பீதரோகணி, துத்தம், தாளிசி, பச்சைக் கற்பூரம், சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லி வற்றல், செம்பு, பொடி, பளிங்கு கல்லு, இரும்பு பொடி, தலை ஓடு, கடுக்காய், சிறுகீரை வேர், பொன்னாங்கண்ணி வேர், வறப்புலா வேர், வகைக்கு விராகனிடை.க, எலுமிச்சம் சாத்திலரைத்து மேற்கண்ட பொன்னாங் கண்ணி சாத்திலும் அரைத்து கயம் செய்து முலைப்பாலிலுரைத்துப் போட்டு வரவும். நன்மை உண்டாகும்.

கண் தெரியாதே போகிறதுக்கு மருந்து:-

சுக்கு, மிளகு, திப்பிலி, சங்கு, அரிதாரம், புங்கம் வித்து, அதிமதுரம், துத்தம், பீதரோகணி, மனோசிலை, பன்னிப் பல்லு, ஆமை ஓடு, புளிக்கம், வெள்ளி சேவல், நெஞ்செலும்பு, இந்துப்பு, சரியிடை ஆக அரைத்து நந்தியா வட்டம் பூச்சாத்திலரைத்து கயம் செய்து தேனிலும் முலைப்பாலிலும் போட்டு வரவும். மாலைக் கண் பிடித்தவர்க்கு மருந்து போட நன்மை உண்டாகும்.

புளியம் பூவு, கிரும்பு, வெள்ளைக் காக்கட்டாம் வேர், மேற்கண்ட பூவும் கூட்டவும். அதிமதுரம், துத்தம், தாளிசு, முத்துவளம், சமனிடை எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து கயம் செய்து மேற்கண்ட சாத்தில் போடவும் தீரும். வேப்பந் தளையை அரைத்து கோழிப் பீச்சு துணிக்கு தடவி சுத்தி உமியில் சுட்டு எடுத்து உள்ளுக்கு கொடுத்து கண்ணில் போடவும். மருதம் பட்டை, சீரகம், வெங்காயம், தட்டி பிழியவும். இலுப்பை பூவு, மகிழம் பூவு, ஆவாரக்கு பூவு. முலைப் பால் விட்டு கசக்கி கண்ணுக்கு பிழியவும். ஒரு நேரம் காலை முதல் மத்தியானம் வரை தலை மிகுதியாய் இடைச்சல் காணும். ஒரு நேரம் உச்சி வரையிலும் பிடிக்கும். நாள் செல்லச் செல்லக் கண்ணில் சதை வளர்ந்து மூடும். கண் தெரியாது.

மிளகு விராகனிடை.உ, உப்புக் கல் விராகனிடை.½, முருங்கைத் தளை, கொட்டைப் பாக்குப் பிரமாணம் நாள் ஒன்றுக்கு முன் 3 தரம் ~~புளியவும்~~. பிழியவும்

மாலைக் கண் பிடித்தவனுக்கு:- பனம் பட்டைச் சாறு, தெளிவு, தண்ணீர், ஆவின் ப பால், சிறுகீரை வேர், பாக்களவு அரைத்து தலைக்கு தேய்க்கவும் தீரும். சர்க்கரையும் பாலும் சோறும் சாப்பிடவும். இந்துப்பு, மஞ்சள், துத்தம் சரியிடையாய் அரைத்து அரைத்து முலைப் பாலிலுரைத்துப் போடவும்.

மிளகு, செம்பு பொடி, ஓரிலைத் தாமரை வேர், தலை ஓடு, துத்தம், பளிங்கிக் கல், இச்கன் வகைக்கு விராகனிடை.க, தாளிசு விராகனிடை.உ எலுமிச்சஞ் சாத்திலரைத்து கயம் செய்து முலைப் பாலில் போடவும்.

கண்ணுக்கு:-

ரசம் விராகனிடை.க, காரியம் விராகனிடை.உ, துத்தம் விராகனிடை.ச,

தாம்பரம் விராகனிடை. எலுமிச்சம் சாற்றிலரைத்து கயம் செய்து ஆவின் நெய்யில் உரைத்துப் போட நன்மை உண்டாகும்.

கண் மங்கலுக்கு:-

சித்தா மணக்கு வேர் பலம்.க, கடுக்காய்த் தூளும்; சர்க்கரையும் சேர்த்து அரைத்து கயம் செய்து துத்தமும் சேர்த்து எலுமிச்சம் சாற்றிலரைத்து கண்ணில் போட்டு வரவும். காலையில் புளியந் தலைபிடித்துச் சாறு பிழிந்து கொதிக்க வைத்து கண்ணைச் சுத்திப் போடவும். மேற்கண்ட கடுக்காய்த் தூளும், சர்க்கரை, இந்துப்பு, வெசப்பித் துணியில் முடிந்து கண்ணுக்கு ஒத்தடம் செய்யவும். மந்தார காசம், சுத்தெல்லாம் திரவுண்டாகி அரிப்பு எடுத்து வலிக்கும். கண் சிறக்கும். நிவர்த்தி.

துத்தம் விராகனிடை. துரிசு விராகனிடை.க, சிறுகீரை வேர், பொன்னாங்கண்ணி ஓரிலைத் தாமரை வகைக்கு ஒரு கொட்டைப் பாக்கு பிரமாணம், குமரி மணி, வெண் பருத்தி, முசுட்டை இசுகள் சாறு வறப்புளா வேர், நெருஞ்சி வேர், விஷ்ணு காந்தி, விலாமிச்சை வேர், வெட்டி வேர், கொத்தமல்லி, கோஷ்டம் வகைக்கு பலம்.¼, அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகி வரத் தீரும்.

கண்ணுக்குள் எப்பொழுதும் வலித்து இருக்கிறதுக்கு:-

வெள்ளைக் காட்டாம் வேர் விராகனிடை,க, வெள்ளைக் குன்றுமணி வேர் விராகனிடை.உ, வெள்ளைச் சாட்டரணை வேர் விராகனிடை.ஙு, மஞ்சள் விராகனிடை.ச, துத்தம் விராகனிடை.ரு, துருசு விராகனிடை. எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து கயம் செய்து முலைப் பாலிலரைத்துக் கண்ணில் போடவும்.

மிறண்ட கண்ணுக்கு:-

ஆவாரன் காய்க் கரி, கடுக்காய்க் கரி, சவுக்காரம், துருசு வகைக்கு விராகனிடை க.ரு, எலும்பு விராகனிடை.ச, பாலிலரைத்து குளிகை செய்து முலைப் பாலில் போடவும்.

கண்ணுளைவு கண் சுளுங்கல் ஒட்டு கண் மங்குங் கண் இசு முதலான வழிகளுக்கு மாத்திரை:-

இரும்பு பொடி, துத்தம், கோழிமுட்டை ஓடு, பம்பாயி முத்துகள், பச்சைக் கற்பூரம் வகைக்கு விராகனிடை.க, செம்பு பொடி விராகனிடை.ஙு, மண்ஓடு விராகனிடை.க பவழம் விராகனிடை.½, வெள்ளி விராகனிடை.ஙு, இதுகளை எலுமிச்சம் பழச் சாற்றிலும் முருக்கப் பூச் சாற்றிலும் காடி தண்ணீரிலும் தனித் தனியே அரைத்து கயம் செய்து முலைப் பாலிலரைத்துப் போட ~~நன்மை~~ கண் மை தீரும்.

சுளுங்கும் கண் குணம்:-

கண்ணுகள் புண்ணுகி நாலுக்கு நாள் கண் சுளுங்கும். நிவர்த்தி:- சங்கு, காந்தம், கடல் நுரை, சுட்ட செங்கல், இந்துப்பு, மனோசிலை, படிகாரம், பிரதோகணி, பச்சைக் கற்பூரம், நாரத்தங்காய் சாறு, நந்தியாவட்டம், பூச் சாற்றிலரைத்து வெள்ளை கட்டிக் குழைத்து கண்ணில் போட்டு வரவம் நன்மை உண்டாகும்.

ஒட்டு கண்ணின் குணம்:-

கண் புண்ணாகும். நீர் வரும். பீளை கபடு கட்டும். துத்தம், துருசு, புளியம் பொருக்கு சுட்ட சாம்பல், கடுக்காய், சுட்ட கரி சரியிடை ஆவின் வெண்ணெயில் கட்டி போடவும் தீரும்.

மங்கு கண் குணம்:-

ராத்திரி காலத்தில் கண்ணீர் நீர் தங்கி பகலில் மங்கும். சமுத்திரா பழம், சுட்டு ஆவின் பாலில் *அரைத்து வெள்ளை கட்டி போடவும். தலை முழுகத் தயிலம்:- சந்தனம், குமரி மணி, அதிமதுரம், சரியிடை ஆவின் பாலில் அரைத்துக் காய்ச்சி தலைக்குத் தேய்த்து போட போட நன்மை உண்டாகும். முடமயிர் பிடித்தவனுக்கு செண்பகப்பூவு சந்தனம், சிறு நாகப்பூ, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், கல்கண்டு, சாதிக்காய், தக்கோலம்

சிந்தி தண்டு வகைக்கு விராகனிடை.க, அரிதாரம் இந்துப்பு, தாம்பிரப் பொடி, சரியிடையாக துளசிச் சாற்றிலரைத்து கழிய செய்து முலைப் பாலில் உரைத்துப் போடவும். நன்மை உண்டாகும்.

படிகாரம், சுத்தம், கடுகு, கோழிமுட்டைத் தோல், ஒரு சரியிடை அரைத்து வெண்ணெயில் குழைத்துப் போடவும்.

மிரண்ட கண்ணுக்கு:-

நெல்லியுள் புங்கம் விரை, புன்கு, சிறுகீரை அரைத்து உருண்டை செய்து முலைப் பாலில் போடவும். பவுத்திரம், பிளவை, சூலை, குட்டம், கிரந்தி, அரையாப்பு, வாதம், மேகசொறி, கண்டமாலை, படர் தாமரை, பறங்கிப் புண், உத்திரவாய்வு, சூலை முட்டி முதலான ரோகங்கள்தீரும்.

சேரான் கொட்டை 50 வெட்டிச் சுட்டு எடுக்கவும். புளியிலை பூவரசந் தளை, கண்ணும்பு, கொஞ்சம் இதுகள் வகைக்கு பலம்.உ, போடவும். பறங்கிப் பட்டை பலம்.ஐ, சுக்கு, குரசாணி ஓமம், மிளகு, ஓமம், மரமஞ்சள், அரத்தை, மல்லிகை குங்குமப்பூ, சித்திரமூலம், தேசாவரம், கிரும்பு, சாதிக்காய், கடுக்காய், சீரகம், கருஞ்சீரகம், தானிக்காய், சிறதேக்கு கஸ்தூரி, கோரோசினை பலம்.½, பனைவெல்லம் வீசை.க, இடித்து லேகியம் செய்து நெய், தேனி விட்டு பிசைந்து வைத்துக் கொண்டு சாப்பிடத் தீரும். கெந்தகம் ரசம், எள்ளு, புன்கு, பேரீச்சம், திராட்சை கலந்து சாப்பிடத் தீரும்.

பவுத்திர ரோகங்களுக்கு :-

சரக்கு கடுகுரோகணி, வால் விளவரிசி, ஓமம், ஆடு தீண்டாப் பாளை வேர், மஞ்சள், மரமஞ்சள் வகைக்கு பலம்.க, குங்கிலியம் பலம்.க இதுகளை இடித்து வெல்லத்தில் போட்டு இடித்து சாப்பிடவும்.

மேகம் பவுத்திரம்:-

கெந்தகம், சங்கந் தளை, மேற்கண்ட பழம், முருங்கைப் பூவு சமனிடை சூரணம் செய்து பாலில் சாப்பிடத் தீரும். வெண்ணெயில் சாப்பிடவும் தீரும்.

குன்ம சூலை குணம்:- மேல் வயறு வலித்து எரியும். வாய் நீர் ஊறும். ஏப்பமிரும். சிறு வெசம்பு பொருத்துகள் இழையும் குத்தும்.

நிவர்த்தி:-

மேல் தோல் சீவின இஞ்சி பலம்.ய, சுக்கு, திப்பிலி, ஓமம், சாதிக்காய், மிளகு, கிரும்பு, வாயுவிளங்கை அரிசி, சீரகம், அதிமதுரம், குரோசாணி ஓமம், அமுக்கிராக் கிழங்கு, கசகசா, லவங்கப் பத்திரி, கொத்தமல்லி, முந்திரிப் பழம், பேரீச்சம் பழம் சூரணம் செய்து திரிகடி பிரமாணம் நெய் விட்டுப் பிசைந்து சாப்பிடவும் தீரும்.

குன்மம் வலிக்கு:-

சுக்கு, வெங்காரம், ஓமம், மிளகு, தும்பை வகைக்கு பலம்.க, சூரணம் செய்து மோரில் சாப்பிட நல்லது ஆகும்.

பித்த குன்மம், சத்தி குன்மம், எரிகுன்மம், கிருமிகளுக்கு நிவர்த்தி:-

கடுக்காய் பலம்.உ, நிலவாகை பலம்.உ, அதிமதுரம் கோஷ்டம் ஏலம், லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, வகைக்கு பலம்.க, விளாம் பழம், கரியுப்பு சூரணம் செய்து திரிகடி பிரமாணம் நெய் விட்டு பிசைந்து சாப்பிடத் தீரும்.

கண் வலி, சிகப்பு, கடுப்பு, அலவு நீர் வடிதலுக்கு மருந்து:-

தானிக்காய், கடுக்காய், மாசிக்காய், வகைக்கு விராகனிடை.க,

அபினி பொரித்த வெங்காரம் படிக்காரம் வகைக்கு விராகனிடை.½, வறப்புலாந் தளை கருவேலாந் தளை, அரைத்துக் கொதிக்க வைத்து கண்ணைச் சுற்றி வளையம் போடவும் தீரும்.

கண்ணுக்கு:- படிக்காரம், துத்தம், துருசு, சரியிடையாக அரைத்து கண்ணை சுற்றி வளையம் போடவும்.

கண்வீக்கம், எரிச்சல், தினவு நீர் வடிதலுக்கு:-

கடுக்காய், நெல்லிக்காய், தேத்தாம் விரை, அதிமதுரம், வேலாம் தளை, புளியங் கொழுந்து, கத்தாளை மடலுக்குள் புதைத்து வெந்த பிற்பாடு முலைப் பால் விட்டு அரைத்து போடவும். நீலகாசம், பித்த காசம், மந்த காசம், படலம், பல்லம், மயிர் குத்தல், பூழ்வெட்டு, மாலைக் கண், நீர் வடிதல், குத்தல், நேத்திர வாரி முதலானதுக்கு நிவர்த்தி.

முத்து, வெள்ளி, தாம்பரம், சங்கு, துத்தம், துருசு, வெங்கலம், மண்டை ஓடு, பீதரோகணி, கடுகு ரோகணி, புங்கம் வித்து சரியிடையாக எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து கயறு செய்து முலைப் பாலிலும் நந்தியா வட்டம் பூவுச் சாற்றிலும் போடத் தீரும்.

கண்ணுக்கு வளையம் போட:-

கோழிமுட்டை, வெள்ளைக் கரு, படிக்காரம், சிறுகீரை, கருவேலாங் கொழுந்து, மாதுளங் கொழுந்து அரைத்து பால் விட்டு கொதிக்க வைத்து காய்ச்சி வளையம் போடவும்.

கண் ரோகங்களுக்கு தயிலம்:-

பொன்னாங்கண்ணி, சிறுகீரை, சீந்திக் கொடி, எலுமிச்சம், நாரத்தம் பழச் சாறு நல்லெண்ணை படி.க, கோரைக் கிழங்கு கோஷ்டம், அதிமதுரம் வகைக்கு சாறு படி.1/8 அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகி வரவும் தீரும்.

கண்ணுக்கு வளையம்:-

கருங் குங்கிலியம், அரிசியும், அபினி சமனுக்கு ஊமத்தம் சாற்றிலரைத்து கண்ணைச் சுற்றி வளையம் போடவும். நிலக் கடம்பந் தளை, சிறுகீரை, தேள் கொடுக்கி, இலை, பூலாந்தளை, மிளகு வகைக்கு எலுமிச்சங் காய்ப் பிரமாணம் அரைத்துப் பாலில் போட்டுக் காய்ச்சித் தலைக்குத் தேய்க்கவும் தீரும்.

கரிசிலாங் கண்ணி தயிலம்:-

கரிசலாங் கண்ணி சாறு படி.க, நல்லெண்ணை படி.க; சேர்த்துக் கத்தாளைச் சாறு படி.வ, நெல்லிக்காய் பலம்.க, கஸ்தூரி மஞ்சள் பலம்.க, சாதிக்காய் பலம்.க, ஆவின் பாலிலரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகி வரவும்.

கண்ணோய், தலை நோய், காச நோவு, பித்தம், உஷ்ணம், பீனிசம் தீரும்.

சுரத் தயிலம்:-

காச்சல், காந்தல், வெதும்பு காச்சல், பழைய காச்சலில் உண்டான பல பிணிகளுந் தீரும்.

அரத்தை அமுக்கிறாங் கிழங்கு, சதகுப்பை, கோஷ்டம், மரமஞ்சள், கொம் பிரக்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், கடுகுரோகணி, திகோரைக் கிழங்கு வகைக்கு விராகனிடை.உ, ஒரு படி நல்லெண்ணையில் இடித்து சூரணம் செய்து அதில் போட்டு காய்ச்சி தலைக்குத் தேய்த்து முழுகி வரத் தீரும்.

(வேறு) இடுப்புக் குடைச்சல், குன்மம், மூலம், வாய்வு முதலானதுக்கு மருந்து:-

பறங்கிப் பட்டை பலம்.அ, அரத்தை, சிறுநாகப்பூ, சுக்கு, சிறுதேக்கு, தாளிச பத்திரி, சீரகம், திப்பிலி, தேசாவரம், கருஞ்சீரகம், கோஷ்டம், வால் மிளகு அதிமதுரம், ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, சதகுப்பை, குங்குமப்பூ, சடாமஞ்சி, கலவாப்பட்டை, மலைதாங்கி, மல்லி, தாளிக்காய், கடுக்காய், நெல்லிக்காய், சித்திர

மூலம், அமுக்கிலாம் புன்னைக்குப் பூண்டு, மிளகு, கிராம்பு, லவங்கப் பத்திரி, தாளிச பத்திரி, சிவனார் வேம்பு, கோரைக் கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு வகைக்கு பலம்.½ இடித்துச் சூரணம் செய்து நாட்டுச் சர்க்கரை படி.உ, கலந்து சாப்பிடத் தீரும். கரப்பான் பதார்த்தம் தள்ளவும்.

குன்மம் வலிக்கு:-

சுக்கு, வெங்காரம், ஓமம், மிளகு, வகைக்கு பலம்.க, தும்பைத் தழை ச.பிடி, சூரணம் செய்து எருமை மோரில் சாப்பிடத் தீரும்.

பித்த குன்மம், சத்தி குன்மம், எரிகுன்மம், கிருமிகளுக்கு நிவர்த்தி:-

கடுக்காய் பலம்.5, நிலாவாரை பலம்.5, அதிமதுரம் கோஷ்டம், ஏலம், லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, தாளிச பத்திரி, கருவாப் பட்டை, சீரகம், வகைக்கு பலம்.க இடித்துச் சூரணம் செய்து திரிகடி பிரமாணம் சாப்பிடத் தீரும்.

குன்மத்துக்கு மருந்து:-

பெருங்காயம் கழற்சிப் பருப்பு, பூண்டு, சுக்கு வகைக்கு பலம்.க, சூரணம் செய்து திரிகடிப் பிரமாணம் சாப்பிடத் தீரும்.

வெள்ளை சாரணை வேர் பலம்.5, கோரைக் கிழங்கு, ஆயிப்பட்டை, சித்திரமூலம், முருங்கைப் பட்டை, பூண்டு, மூத்தக் கொட்டை வேர், நெருஞ்சி சமூலம் வகைக்கு பலம்.க, சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், ஓமம், இந்துப்பு, நவச்சாரம், திரிபலை, திப்பிலி, மல்லி வகைக்கு பலம்.க சூரணம் செய்து சாப்பிடத் தீரும். கழற்சிக் கொட்டைப் பருப்பு பலம்.க, வேங்கைப் பட்டை பலம்.க, முருங்கைப் பட்டை பலம்.க, பனை வெல்லம் பலம். போட்டு இடித்து சாப்பிட தீரும். பெரியோர்களுக்கு, சிறு குழந்தைகளுக்கு நன்மை உண்டாகும்.

சுக்கில மேகம், ரத்த மேகம், சீழ் மேகம், கிரிச்சனம் மூலமுந் தீரும்.

மருந்து:-

பறங்கிப் பட்டை, கெந்தகம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, சிறுநாகப்பூ, கண்டங்கத்திரி, அரத்தை, ரசகற்பூரம், அமுக்கிலாம், சித்திரமூலம், சடாமஞ்சி இவைகள் சரியிடையாக இடித்து சூரணம் செய்து சர்க்கரை கலந்து சாப்பிடத் தீரும்.

குன்மம் மூலம், பாரிச வாய்வு, வயிற்று வலிக்கு மருந்து:-

வெள்ளை பூண்டு, சீரகம், இந்துப்பு, திப்பிலி, மிளகு, ஓமம், பெருங்காயம், வகைக்கு பலம்.க, சூரணம் செய்து ஒரு மண்டலம் சாப்பிட குன்ம நோவு தீரும். மாணியில் நீர் அடைத்து இறங்காது இருந்தால் அதற்கு மருந்து:- ஊமத்தம் விரையை சமனிடை பேலரிசியும் கூட்டி அரைத்து கீழ் வயிற்றுக்குப் பூசவும் உடனே நீர் இறங்கும்.

வயிறெரிப்புக்கு மருந்து:-

கழற்சிக் கொட்டைப் பருப்பு, வேங்கைப் பட்டை, முருங்கைப் பட்டை, வகைக்கு பலம்.க, பனை வெல்லம் அச்சு.உ இடித்து லேகியம் செய்து சாப்பிடத் தீரும்.

சன்னி 13-க்கு தீரும் மருந்து:-

துருசு வெங்காரம், சூதம், லிங்கம், சரியிடையாக நிறுத்து தும்பைச் சாறு விட்டு அரைத்து சீலையில் தடவி திரித்து புகைபிடிக்கத் தீரும்.

20.9.63.

தலை வலிக்கு மருந்து:-

அரிதாரம், குங்கிலியம், சாதிலிங்கம், நவச்சாரம், கருஞ்சீரகம், மிளகு, கார்போகரிசி, சாம்பிராணி, சரியிடையாக நிறுத்து இடித்து குப்பை மேனிச் சாறு விட்டு அரைத்து துணியில் தடவி திரித்து புகை பிடிக்கத் தீரும்.

உயிர் நிலை கடுப்புக்கு:-

கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், கோரைக்கிழங்கு, மஞ்சள், வெள்ளறுகு தென்னம் பூவு, கலியான முருக்கந் தழை, ஆத்திப் பட்டை சரியிடையாகச் சூரணம் செய்து திருகடி பிரமாணம் சாப்பிட்டு தண்ணீர் குடிக்கவும். ~~உயிர் நிலையில் மேகத்தி~~

உயிர் நிலையில் மேகத்திலும் சம்பந்தப்பட்ட ஊத்துலுக்கு:-

கடுக்காய், ஆத்திப்பட்டை, கெந்தகம், நெல்லிவத்தல், வெங்காரம் சரியிடை சூரணம் செய்து தேனில் சாப்பிட நல்லது ஆகும்.

மேகத்துக்கு:-

கருங் குருவை அரிசி மாவு, நீர்முள்ளி விரை, தழையும் சேர்த்து அரைத்துச் சாப்பிடவு

தாளகம் பலம்.க, வாழைச் கிழங்கில் புதைத்து நீர் வத்தக் காய்ச்சி வைத்து எ. சீலை மண் செய்து 50 எருமுட்டையில் புடம் வைக்கவும். அது நீத்து இருக்கும். அதை அரைத்து எடுத்து சீசாடிவில் வைத்துக் கொண்டு தேனில் சாப்பிட சிலேத்தும நோய் 96 சுரம், அரையாப்பு, கிரந்தி, குட்டம், சூலை தீரும்.

ஈளை, இருமல், மந்த வாய்வு, வயத்து வலி, அரோசிகம், வாதம் பித்தம், உப்பிசம், நெஞ்செரிவு, வாந்தி தீரும்.

மருந்து:-

அமுக்கிலாம் வேர் பலம்.3/4, சுக்கு பலம்.$\frac{1}{2}$, ஏலம் பலம்.$\frac{1}{2}$, கூகை நீர் பலம் $\frac{1}{2}$. கிராம்பு பலம்.$\frac{1}{2}$, சிறுநாகப்பூ பலம்.$\frac{1}{2}$, திப்பிலி பலம்.உ, மிளகு பலம்.க, கல்கண்டு போட்டு இடித்து பிசைந்து இஞ்சிச் சாறும் வெல்லமும் லேகியம் சூரணமும் போட்டுக் கிளறிச் சாப்பிடவும். ஈளை, இருமல், மூல வாய்வு தீரும். மருந்து:-

சத்தி சாரம், ஓமம், மரமஞ்சள், திப்பிலிமூலம், திப்பிலி, மஞ்சள், முள்ளி வேர், சுண்டவேர், கண்டங்கத்திரி வேர், சிறு தின்டாப்பாளை, பெரு மரத்துப் பட்டை, கோஷ்டம் முத்தக்காசு, கண்டு பறங்கி, கருஞ்சீரகம், சீரகம், திரிகடுகு, திரிபலை, வாய்விளங்கம், பெருங்காயம், சித்திரமூலம், அதிவிடையம், செவியம், வெப்பாலை அரிசி, சரியிடை சூரணம் செய்து சீனி கலந்து சாப்பிடத் தீரும்.

சகல இருமலுக்கு:-

கிராம்பு பலம்.$\frac{1}{2}$, சிறுநாகப்பூ பலம், ஏலம் பலம்.க, மிளகு பலம்.உ, திப்பிலி பலம்.8, சுக்கு பலம்.4, அமுக்கிலாம் பலம்.5, நாட்டுச் சர்க்கரை கலந்து சாப்பிடவும். பாலிலும் சாப்பிடலாம். மேகம் அஸ்தி வெட்டை சுவாச காசம் ஈளை இருமல், பாண்டு மேக ஊறல் தீரும். சகல இருமல் தீரும்.

மருந்து:-

கண்டங்கத்திரி, தூதுவளை, மிளகு, தாளிசி, ஆடாதோடை, துளசி, சரியிடை தழை வகை சூரணம் செய்து பனை வெல்லம் சேர்.உ, திப்பிலி, அரத்தை, சுக்கு வகைக்கு பலம்.க இடித்து பிசைந்து சாப்பிடவும்.

இதுவும்:- கீழாநெல்லி பூண்டு வீசை.க, இடித்து சாறு பிழிந்ததில் நல்லெண்ணை படி.க, சீரக பலம்.உ, அரைத்துப் போட்டுக் காய்ச்சி மெழுகத் தீரும்.

இருமலுக்கு:- நெல்லி வத்தல் படி.10, இடித்து சூரணம் செய்து சீனி விராகனிடை.$\frac{1}{2}$.

கரைத்து பாக்கு செய்து சுக்கு, ஓமம், திப்பிலி மூலம், கிராம்பு, தக்கோலம், ஏலம், குங்கிலியம், வாய்விளங்கம், சீரகம், கொத்தமல்லி கூகைநீர், அதிமதுரம், வகைக்கு பலம்.½ சூரணம் செய்து நெய் படி.¼, லேகியம் செய்து பிசைந்து சாப்பிடத் தீரும். ஈ ஈளை இருமல், க்ஷயம் தீரும்.

__தலைவலிக்கு மருந்து:-__

எட்டிக் கொழுந்துஒரு பிடி, மிளகு தட்டிப் போட்டுக் காய்ச்சி முழுகத் தீரும்.

__எரிணத்தின் குணம்:-__

உடல் ஆதி அந்தமும் எரியும். மூக்கு அடைக்கும், வாய் வழி சுவாசம் போகும். குழந்தை அலறி அழும். நித்திரை வராது.

__மருந்து செய்யவும்:-__

தென்னம் பிஞ்சு சாறு, அசித் தகரை தளைச் சாறு பழம் பாசிச் சாறு, கத்தாளை வேர்ச் சாறு, நன்னாரி வேர், வெங்காயச் சாறு, விளக்கெண்ணை படி.½ ஏலம் பட்டை, கோஷ்டம், சீரகம், சந்தனம், மதுரம் வகைக்கு விராகனிடை.உ அரைத்துப் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும். மற்றக் குணங்களும் தீரும்.

__சகல வியாதிகளுந் தீர மருந்து:-__ Incomplete

பெட்டியுப்பு பலம்.5, அட்டுப்பு பலம்.1½, படிக்காரம் பலம்.1வ, சருசு பலம்.1½, நவச்சாரம் பலம்.க, அன்னபேதி பலம்.க, கெந்தகம் பலம்.1½, பழைய புளி சேர்.க இவைகளை இடித்து அடை தட்டி இரும்பு தகட்டிலுல் சுட்டு தாலுல் வெண்மையாகும்.
மேற்கண்ட சரக்கு:- ரசம் பலம்.½, கெந்தகம் பலம்.½, அரிதாரம் பலம்.வ, மனோசிலை பலம்.½, சாதிலிங்கம் விராகனிடை.க சூரணம் செய்து (ஆரம்பமும் முடிவுமில்லை).

Incomplete

__சுத நாத்த தயிலம்:-__

சுரம், காந்தல், வெப்பு, பழைய சுரத்திலுண்டான பல பிணிகளுந் தீரும் அறியவும். அமுக்கிலாம், பச்சைக் கிழங்கு, அதுடன் அரத்தை, சதகுப்பை, கோஷ்டம், மரமஞ்சள், கொம்பரக்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், சதகுப்பை, தானிக்காய், கடுக்காய், நெல்லிக்காய், கடுகுரோகணி, கோரைக் கிழங்கு, வகைக்கு விராகனிடை.உ அரைத்துப் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

__நீர்க் கடுப்பு, நீர் எரிவு, நீரிழிவு, மேக காங்கை, நீரடைப்பு பாண்டு காமாலை கண்ணெரிவு, சுரம், தாகம் தீர மருந்து:-__

கற்பூரம், கோஷ்டம், சாஸ்திர பேதி, கல்நார், சாதிக்காய், கிராம்பு, சடாமஞ்சி, ஏலம், வெண்மப்பு, சந்தனம், சீரகம், மல்லி, அமுக்கிலாம், சீந்தி சர்க்கரை, சலாசித்து நெருஞ்சி வேர், விள்ளாம்பட்டை, இலவம் பிசின், கோரைக் கிழங்கு, விலாமிச்சம் இந்துப்பு, வெங்காரம், கோஷ்டம் பலம்.ச, தேசாவரம் சுக்கு, சாதிக்காய், கிராம்பு, சீரகம், மிளகரணை, சங்கம் வேர் வகைக்கு பலம்.க, ஆவின் பாலும், வாழைப் பழம்.உய, சர்க்கரை பலம்.உய பாகு செய்து கிளறி இத்துடன் வங்க பற்பம் பலம்.க, போட்டு பிசைந்து சாப்பிட தீரும்.

__சந்தனாதி சூரணம்:-__

சீதம், ரெத்தம் விழுதல் ~~வாய்லி ரெத்தம் விழுதல்~~ முதலான மேகம்.உக-ம் தீரும். சந்தனம், கோஷ்டம், நன்னாரி, கடுகுரோகணி, கற்பூரம், சீந்தி, சர்க்கரை, கோரைக்கிழங்கு, மஞ்சள், இலுப்பைப்பூ, அதிமதுரம், பூலாம் கிழங்கு, மஞ்சள், இலுப்பைப் பூ, அதிமதுரம், பூலாம் கிழங்கு, ஏலம், தாமரைத்தண்டு, மரமஞ்சள், விலாம்பிச்சம், நெல்லி வத்தல் ஒர் நிறையா யிடித்து சரியிடை சீனி கலந்து சாப்பிடத் தீரும்

திப்பிலி லேகியம்:-

சிலேத்துமம், வாதம், அதிசாரம், வாய்வுகள், குன்மம், உப்பிசம் தீரும். திப்பிலி பலம்.25, பொடி செய்து சர்க்கரை படி.உ, கரைத்து பாகு செய்து சுக்கு அரத்தை, அக்கலாக் காரம், கடுக்காய், ஓமம், சீரகம், கொத்தமல்லி, வெப்பாலை, சண்பகப்பூ, கோஷ்டம் வகைக்கு பலம்.க, சூரணம் செய்து லேகியம் கிண்டி சாப்பிடத் தீரும்.

மிளகு லேகியம்:-

மிளகு பலம்.12 சூரணம் செய்து 15 பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகு செய்து அக்கலாக்காரம், சீரகம், கிராம்பு, ஏலம், கோஷ்டம், அதிமதுரம், வாய் விளங்கம், தாளிச பத்திரி, நறுக்கு மூலம் வகைக்கு பலம்.க சூரணம் செய்து சாப்பிட சிலேத்துமம். கபம், நீர்த் தோஷம், சில்விஷங்கள் வாதம், வாய்வுகள் தீரும்.

கதலி ரசாயனம்:-

பெரும்பாடு அரையாப்பு, எரும்புருக்கி, பிரமேகம், சூலை கிரந்தி, அஸ்திசுரம், அஸ்தி வெட்டை, உஷ்ணம் எரிவு, காந்தல், சிரங்கு, சொறி, கரப்பான், மேகஊறல், கிருமி, மூலச் சூடு, இளைப்பு, இருமல் நீரிழிவு, கிரிச்சனம் தீரும்.

மருந்து:-

ஆவாரம் விரை, கஸ்தூரி மஞ்சள், சிறுநாகப்பூ, நிலப்பனைக் கிழங்கு, கஞ்சா கோரை, செஞ்சந்தனம், தக்கோலம், அதிவால் மிளகு, நிகர கல்கண்டு, கலந்து சாப்பிடவும்.

கெந்தக ரசாயனம்:-

வாதம் ஐம்பது, பித்தம்.40, கிரிச்சனம்.6, சூலை18, சோகை, க்ஷயம், மேகம் தீரும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, கிராம்பு, ஏலம்பட்டை, லவங்கப்பத்திரி, சாதிக்காய், தானிக்காய், தாளிச பத்திரி, சிறுநாகப்பூ, விலாமிச்சம் ஓமம், சீரகம், குரோசாணி, ஓமம், அரத்தை, சித்திரமூலம், திப்பிலி மூலம், பூலாங்கிழங்கு, திப்பிலி, கருஞ்சீரகம், கூகைநீர், முந்திரிபழம், சந்தனம், தக்கோலம், அதிமதுரம், மூத்தக்காசு, சடாமஞ்சி, கொத்தமல்லி, தானிக் கடுக்காய், நெல்லிக்காய், வெட்டிவேர், குங்குமப்பூ, நிலப்பனைக் கிழங்கு, அமுக்கிலாங் கிழங்கு, நெருஞ்சிவிரை, நீர்முள்ளி விரை, பூனைக்காலி வித்து வகைக்கு பலம்.3/4 புறங்கிப்பட்டை பலம்.உ, சூரணம் செய்து சீனி சர்க்கரை வீசை.க பாகு செய்து 4 பலம் கெந்தகம், காச்சிப் பாகு செய்து லேகியம் செய்து சாப்பிடவும் தீரும்.

முடக்கொத்தான் லேகியம்:-

வெட்டை இருமல், வெள்ளை விழுதல், முடக்குகள், சொறிகள், வயிற்று வலி, கண் புகைச்சல், மேகசூலை, மார்க்குத்து, மார் அடைப்பு, நீர் சுருக்கு, அண்ட வாதம், உட்காய்ச்சல், மலக்கட்டு தீரும்.

விளக்கெண்ணை படி.¼, முடக்கொத்தான் தழை.4 பிடி கழச்சிக்காய், சாட்டரணை, வேர், தானிக்காய், கடுக்காய் பலம்.க, நெல்லி வத்தல் பலம்.க, சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, திப்பிலி பலம்.க, பனைவெல்லம் பலம். லேகியம் செய்து சாப்பிடவும்.

சூதக வலிக்கு மருந்து:-

அகஸ்தியர் குழம்பில் பணவிடை எலுமிச்சம் பழச் சாத்தில் கொடுக்க பேதியாகும் அதிகமானால் வசம்பைக் கருக்கி சுடு தண்ணீரில் சாப்பிடவும். கறியுப்பை கொட்டைக் கரந்தைச் சாத்திலரைத்து 5 புடம் சி செருப்படை சாத்தில் 5 புடம் இப்படிப் புடம் போட்டால் செந்தூரமாகும். அதில் நாளொன்றுக்கு விராகனிடை வீதம்மூன்று தினம்

தேனில் சாப்பிட குதகவலி, நெஞ்சு நோவுகள், நெஞ்சு எரிவுகள், சூலை ரோகங்கள், குதவலிகளும், தீரும். மதுதேனில் மறுபடி நூத்தியிலை மிளகு, பூண்டு வகைக்கு பலம்.க, வசம்பு விராகனிடை.க, குதகமாயிருக்கிற மூன்று நாளும் சாப்பிட குதக் வலி தீரும். இந்துப்பு, திப்பிலி, பெருங்காயம் இதுகள் சரியிடை இளவறுப்பாக வறுத்து காய வைத்து சூரணம் செய்து வெந்நீரில் கொள்ளத் தீரும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, கழற்சிப் பருப்பு, ஓமம், இந்துப்பு சரியிடையாக வறுத்து சூரணம் செய்து நல்லெண்ணெயில் குழைத்துச் சாப்பிடவும். மேற்கண்ட நிலவாகை சமூலம் பலம்.5, சுக்கு பலம்.5, இடித்து சூரணம் செய்து திரிகடி பிரமாணம்.3 நாள் சாப்பிட 6 நாள் பத்தியமாய் இருக்கவும். குதக வலி தீரும்.

<u>கெர்ப்ப ரோகங்களுக்கு பொதுப் பிரயோகம்:--</u>

ஆடாதோடை, ஊசி பொடுமி, சிவனார்வேம்பு, சீந்தி வகைக்கு சாறு படி.¼, பசுவின் நெய் படி.க, ஒன்றுக் கலந்து காய்ச்சி மரமஞ்சள் பலம்.க, நல்ல மை போல அரைத்து காய்ச்சி சாப்பிடவும். வீட்டுக்கு விலக்கமாயிருக்கிற போது மூன்று நாளும் சாப்பிடவும். இதனடியில் சொல்லி வருகிற மருந்தைச் சாப்பிட கெர்ப்ப ரோகங்களும் நீங்கும். உப்பு, புளி தள்ளி பத்தியமாயிருக்கவும்.

நாயுருவிச் சாம்பலும் பலம்.க, எள்ளுச் சாம்பலும் பலம்.க, திருவு கள்ளி இலைக்கள்ளி, சித்திரமூலம், சாட்டரணை, தைவேளை, நொச்சி, குறிஞ்சா, குப்பைமேனி, முடக்கொத்தான், இஞ்சி விழும்பி, தேவதாரி, வெள்ளருகு, தும்பை, சங்கங்குப்பி, வகைக்கு சாறு படி.1/8, மரமஞ்சள், மஞ்சள், ஓமம் அதில் சரக்கு வகை பெருங்காயம் இந்துப்பு, வளையலுப்பு, நவச்சாரம், சந்திசாரம், படிக்காரம், சவுக்காரம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, கடுகு, கிரும்பு, வகைக்கு பலம்.½, இளவறுப்பாய் வறுத்து சூரணம் செய்து வரி குமத்தம் காய்சாறு படி.¼, பூண்டு பலம்.க, சிவதை பலம்.க, அரைத்துப் போட்டு லேகியம் செய்து சாப்பிட 6 வகை கெர்ப்பசூலைகளும், மற்றப் பிணிகளும் தீரும். பெண்களுக்கு பிள்ளையுண்டாகும்.

<u>அதற்கு மருந்து:-</u>

விளக்கெண்ணை படி.க, வரிகுமத்தம் காய், வேப்பம் பட்டை, கழற்சி, ஐவிரலி முடக்கொத்தான், காட்டுக் கள்ளி, கடலாத்தி, பொடுமி வகைக்கு சாறு படி.½, சித்திரமூலம், ஆடு தீண்டாப் பாளை வேர், சிறுவை, நிலாவாரை, பு/பலைக் காஞ்சொறி சங்கம் வேர், ஊகட்டுதளை, காக்கட்டான் ஏமரி, வெள்ளை சாட்டரணை, இவைகளின் வேர் வகைக்கு பலம்.க, முருங்கைத் தழை பலம்.க, சிறுகொன்னை பட்டை பலம்.க, வெள்ளருகு பலம்.க, கொடிக்கள்ளியை வாட்டிப் பிழிந்த சாத்திரும் கடுகு, திப்பிலி, கடுக்காய் வால்மிளகு, குரோசாணி, ஓமம், கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், சித்தரத்தை, சுக்கு, சிறுநாகப்பு, இந்துப்பு, பெருங்காயம், சாதிக்காய், தாளிசபத்திரி, செருங்கொட்டை, ரசகர்ப்பூரம், இஞ்சி, நவச்சாரம் வகைக்கு விராகனிடை.4 இது காட்டாமணக்கு சாத்திரும் வெள்ளாட்டு நீரும் அரைத்து கலக்கி பதமாகக் காய்ச்சி புகை ஊறல் நீர் மேல் நெருப்புடி தளை வெங்காரம் வகைக்கு விராகனிடை.உ காய்ச்சி சாப்பிடப் பிள்ளை உண்டாகும். வீட்டுக்கு விலக்கமன முதல் மூன்று நாளும் உதயத்தில் ஒரு கரண்டி வீதம் சாப்பிட ஆறு வகை கெர்ப்ப ரோகங்களும் சூலையும் போய் வாய்வு உதிர திரட்சியும், குன்மமும், கெர்ப்பரோகங்களும் தீரும். வெள்ளாட்டுப் பாலும், அன்னமும் சாப்பிட வேணும்.

தலைக்கு வெந்நீர் வார்த்து ஆவாரந்தழை ஐவிரலித் தழை சிறுவந் தளை ஆய யிலை, இலைகளை பாலில் சாப்பிடவும். வாய்வு, மந்தம் பயித்திய வாய்வு, மந்த வாய்வு தீரும்.

<u>மருந்து:-</u>

சுக்கு, மிளகு, திப்பிலி, சித்திரமூலம், மட்ட தேசாவரம், கோஷ்டம், நவச்சாரம், இந்துப்பு அதிவிடையம், பெருங்காயம், ஓமம், சீரகம், வாய்விளங்கம், சுட்ட

சுட்ட வசம்பு, கறியுப்பு வகைக்கு பலம்.க, 15-பலம் கடுக்காய் சேர்த்து இடித்து சூரணம் செய்து சாப்பிட்டு வர திரிகடி பிரமாணம் வெந்நீரில் சாப்பிட முன் சொன்ன நோவுகள் தீரும்.

இந்த மருந்து சாப்பிட சத்திவிக்கல். அரோசியம், நெஞ்செரிவு, கைகால், வயறு எரிவு, தேகம் படபடப்பு, அஸ்தி வெட்டை, எரிகுன்மம், வாதம், பித்தம் பாண்டு, வீக்கம் இவைகள் தீரும்.

மேகம், பிரமேகும், மூத்திரகிரிச்சிரம், சோகை, காமாலை, பயித்திய சுரம், இருமல், பீனிசம், பதிமூன்று வித வியாதிகள் தீரும்.

மருந்து:-

ஏலம், அதிமதுரம், தாமரைக் கிழங்கு, தாமரைத் தழை, நிலவேம்பு, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், கோஷ்டம், சந்தனம், வாய்விளங்கம், சடாமஞ்சி, தண்ணி முட்டான் கிழங்கு, அமுக்கிரான்கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, நன்னாரி வேர் சுக்கு, மிளகு, திப்பிலி, தாளிச பத்திரி, நெய்தல் கிழங்கு, கருஞ்சீரகம், நற்சீரகம், சாதிக்காய், நெல்லிக்காய், தக்கோலம், காட்டுச் சீரகம், குங்குமப்பூ, கோரோசனை, கற்பூரம், அதிமதுரம், சிறுநாகப்பூ, கொத்தமல்லி, அதிவிடையம், கோரைக் கிழங்கு, சிறுதேக்கு, மஞ்சள், வெட்டிவேர், விலாமிச்சம், கூகைநீர், சீதா செங்கழுநீர், தழை நெல்லி வத்தல், மரமஞ்சள், தாளிசபத்திரி, சீந்திக் கொடி, சதுலம், கருங்காலிப் பட்டை, வேப்பம் பட்டை, அமுக்கிராங் கிழங்கு, சாட்டரணை வேர் இந்துப்பு இது வகைக்கு பலம்.½, இவைகளை காய வைத்து சூரணம் செய்து இதுக்கு நிகர் சர்க்கரை கலந்து சாப்பிட முன்னிட்டுச் சொன்ன நோவுகள் தீரும்.

இந்த மருந்து மாதுளந் தழை கசாயத்தில் போட்டுச் சாப்பிட வாயில் மாணியில் ரெத்தம் விழுதல், நலலகு ஆகும். நீர்த்தாரை, எரிச்சல் மாணியில் ரெத்தம் விழுதல் வாயில் ரெத்தம் விழுதல் தாகம், சோபம் சத்தி பித்தம் தலைநோய், அஸ்தி சுரம், விஷசுரம், ஈளை நோவு, இருமல் தீரும். ஏலம், கிராம்பு, மஞ்சள், அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலி மூலம், செவியம், சித்தரத்தை, சந்தனத்தூள, சாதிக்காய், சாதிபத்திரி தகரை விரை, வால்மிளகு, முந்திரிப்பழம், பேரிச்சம் பழம், தாமரைத் தழை, மேற்கண்ட கிழங்கு, கொத்தமல்லி, நெல்லி வத்தல், நெய்யில் வறுத்து உமி நீக்கிப் போடவும். பருத்திக் கொட்டை மாதுளம் வேர் அதின் பட்டை, தழை, வில்வவேர், சந்தனத்தூள், நிலப்பனைக்கிழங்கு, நன்னாரி வேர், கோரைக்கிழங்கு, சீந்திக்கொடி சதுலம் இந்த சரக்குகள் வகை ஒன்றுக்கு ஒரு பலமாக வாங்கி காய வைத்து இடித்து சூரணம் செய்து திரிகடி பிரமாணம் சாப்பிட்டு வரவும். நோவுகள் தீரும்.

(வேறு) தேனிலும் நெய்யிலும் சாப்பிட அரோசிகம், வாந்தி ஒக்காளம், பொருமல் தீரும்.

மருந்து:-

கிராம்பு பலம்.க, மிளகு பலம்.உ, சிறுநாகப்பு பலம்.3, தாளிச பத்திரி பலம்.4, கூகைநீர் பலம்.5, சுக்கு பலம்.20 இவைகளை இடித்து சூரணம் செய்து நிகர் சீனி சர்க்கரை கலந்து வேளை 1-க்கு திரிகடி பிரமாணம் சாப்பிடவும். (வேறு) பித்தம், வாதம், வாய்வு, கிரந்தி, ரணம், அரிகிரந்தி, மேகரூமல், சொறிசிரங்கு, சில்விஷங்கள், பெரும்பாடு, எலும்புருக்கி தீரும்.

மருந்து:-

ஏலம், சீரகம், கிராம்பு, மரமஞ்சள், விலாமிச்சம், கார்போக அரிசி, கடுக்காய், கோரைக்கிழங்கு, நெற்பொரி, சிறுநாகப்பு, பெருங்காயம், சரியிடையாக சூரணம் செய்து தேனிலும், நெய்யிலும் சாப்பிடத் தீரும்.

(வேறு) இஞ்சி சாத்திலும், மாதளம் பழச் சாத்திலும் சாப்பிட காமாலை, காசம், இருமல், வாந்தி, அரோசிகம், நெஞ்செரிவு, தேகம், எரிவு குன்மம்,

பித்த வெட்டை, தாது நஷ்டம், கண் புகைச்சல், கண் மயக்கம், புண்ணு சிரங்கு, கரப்பான் சூலை, குஷ்டம், வாய்வு இவைகள் தீரும்.

(வேறு) தாளிச பத்திரி, தானிக்காய், கடுக்காய், நெல்லிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, சிறுதேக்கு, அதிமதுரம், சிறுநாகப்பூ, கருவாப்பட்டை, லவங்கப் பத்திரி, செவியம், வாய்விளங்கம், சித்தரத்தை, வால்மிளகு, ஓமம், குரோசாணி, ஏமம், கோஷ்டம், கோரோசனை, தேசாவரம், அக்கிலாக்காரம், கொத்தமல்லி, முந்திரிப் பழம், பேரிச்சம் பழம், கூகைநீர், நிலப்பனைக் கிழங்கு, அமுக்கிராங்கிழங்கு, கோரைக் கிழங்கு, விலாமிச்சம் வேர், வெட்டி வேர், தூதுவளை, கண்டங்கத்திரி, நெய்தல் கிழங்கு, நெல்பொரி, வகைக்கு பலம்.க, காய வைத்து இடித்துச் சூரணம் செய்து சாப்பிடத் தீரும்.

கொதிப்பு கணம் கணை 18-க்கும் அஸ்திசுரம், அஸ்திவெட்டை, மேக சுரம், மேக வெட்டை, சிறியோர்களுக்கும், பெரியோர்களுக்கும் இந்த மருந்த எண்ணை சாப்பிட நல்லது ஆகும். நோவுகள் தீரும்.

விளக்கெண்ணை படி.$\frac{1}{4}$, எலுமிச்சம் பழச் சாறு படி.$\frac{1}{2}$, இலந்தைத் தழைச் சாறு படி.$\frac{1}{2}$, ஈர்வெங்காயச் சாறு படி.$\frac{1}{4}$, சேர்த்துக் கத்தாழைச் சாறு படி.1/8 கருஞ்சீரகம் பலம்.$\frac{1}{4}$, இவைகளை அரைத்துப் போட்டு பதமாகக் காய்ச்சி சாப்பிட்டு வந்தால் தீரும். நல்லது அறியவும்.

<u>அந்தக கணத்துக்கு மருந்து</u>:-

சிறுகீரை, பொன்னாங்கண்ணி, வறப்பூலாம் நீர்ப்பூலாம், அவுரி இவைகளின் வேர், சரக்கு, கடுக்காய், தேத்தாம் வித்து வகைக்கு ஒரு பலம் வாங்கி அரைத்து வெண்ணெயில் காய்ச்சிச் சாப்பிடச் சுகமாயிருக்கும். மேற்கண்ட அந்தக கணம், மந்தார கணம், வயிறு ஊதும் காச்சலும் மயக்கமும் தீரும்.

<u>மருந்து</u>:-

கானி மரத்துத் தழை கரிசிலாங் கண்ணி சமூலம் வல்லாரைத் தழை, தும்பைத் தழை கண்டங்கத்திரிச் சாறு, நொச்சிச் சாறு இந்த சாறுகள் வகைக்கு படி.$\frac{1}{4}$, விளக்கெண்ணை படி.க, சரக்குகள் விபரம் வெள்ளைப்பூண்டு, சுக்கு, மிளகு, திப்பிலி, தானிக்காய், கடுக்காய், நெல்லிக்காய், வகைக்குப் பலம்.க, கிராம்பு விராகனிடை.உ, வசம்பு விராகனிடை.உ அரைத்துப் பதமாய்க் காய்ச்சி சாப்பிடக் கணங்களெல்லாந் தீரும்

<u>கொதிப்பு கணத்தின் குணம்</u>:-

நெஞ்சும், விலாவும், குத்தல் உண்டாகும் நெத்திகள் வேர்க்கும். பஞ்சு போல் கண் வெளுக்கும். இருமல் உண்டாகும். தலை வலி காணும். தொண்டை மங்கும்.

<u>இதற்கு மருந்து</u>:-

விளக்கெண்ணை படி.க, பசுவின் பால் படி.க, கீழா நெல்லித் தழைச் சாறு படி.$\frac{1}{2}$, அதிமதுரம், கடுக்காய், தானிக்காய், சுக்கு, விஷ்ணுகாந்தி, துளசி பலம்.க தூதுவளை பலம்.க இளநீர் தண்ணீர் படி.க, முள்ளி வேர், செவ்வள்ளிக் கொடி, தண்ணி முட்டான் கிழங்கு, முசுமுசுக்கைச் சாறு, கண்டங்கத்திரிச் சாறு, மணத்தக்காளிச் சாறு, கருஞ்சீரகம், நல்ல சீரகம், வகைக்கு விராகனிடை.4 அரைத்து போட்டுக் காய்ச்சி சாப்பிடத் தீரும்.

<u>ஊமை கணத்தின் குணம்:- அது சிலேத்தும குணம்</u>:-

நாள் தோறும் ரெத்தம் வற்றும். தாகம் மிகும். பசி மந்திக்கும். வயிறு பொருமும். எரைச்சலாக் கழியும். மூச்சு அதிகமாகும். கை கால் சோர்ந்து போகும். சோம்பலும் தூக்கமும் உண்டாகும். இவைகள் தீர மருந்து:-

இண்டம் வேர்த் தண்டுச் சாறு படி.க, குமளந் தழைச் சாறு படி.$\frac{1}{4}$, மாசிப் பத்திரித் தழைச் சாறு படி.$\frac{1}{4}$, துளசிச் சாறு படி.$\frac{1}{4}$, வெங்காயச் சாறு படி.$\frac{1}{8}$.

முடக்கொத்தான் சாறு படி.¼, தூதுவளைச் சாறு, நுணாச்சாறு, வல்லாரைத் தளைச் சாறு, கஞ்சாங் கோரைச் சாறு, இந்தச் சாறுகள் வகைக்கு படி.½, விளக் கெண்ணெ படி.க; சாதிக்காய், ஏலம், கிராம்பு, கடுகுரோகணி, கடுக்காய், வால்மிளகு, ஓமம், வசம்பு; சுக்கு வகைக்கு பலம்.க, அரைத்துக் காய்ச்சி சாப்பிடவும் தீரும்.

<u>மூல கனத்தின் குணம்:-</u>

வாதம் பித்தம் அதிகரித்து சீத ரத்தமாகக் கழியும். சூத்தக் குடுப்பாகும். காச்சலும் வயறு எரிச்சலும் விடாத தலைவலி உண்டாகும். முகங்கள் வேறுபடும்.

<u>இந்த வியாதிக்கு மருந்து:-</u>

சீரகம் பலம்.க, அதிவிடையம் பலம்.க, கடுக்காய் பலம்.க, சுக்கு பலம்.க, பறங்கிப் பட்டை பலம்.க, கசகசா பலம்.க, சந்தனத்தூள் பலம்.க, சாதிபத்திரி பலம்.க, நெல்லி வத்தல் பலம்.க, சித்தமுட்டித்தளை பலம்.க, செம் பருத்தி தளை பலம்.க, பழம் பாசித் தளை பலம்.க, குண்டுமணித் தளை பலம்.க, இ இலவம் பட்டை பலம்.க, சூரணம் செய்து வெண்ணெயில் சாப்பிடத் தீரும்.

<u>ஈளை, இருமல், காசம் உண்டாகி வருகிறதுக்கு மருந்து:-</u>

கல்நார், லவங்கப் பத்திரி, கிராம்பு, செவியம், அதிவிடையம், திப்பிலி, தாளிக்காய், அக்கலாக்காரம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கடுக்காய், குரோசாணி ஓமம், கஸ்தூரி சீரகம், ரசகற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை இதுகள் சரியிடை நாரத்தம் பழச் சாற்றிலரைத்து குளிகை செய்து முலைப் பாலில் கொடுக்கத் தீரும்.

<u>மாட்டுக்காவது மனிதருக்காவது மருந்து இருந்தால் நிவர்த்தி செய்வதற்கு மருந்து:-</u>

அவுரி வேர், பிரமியிலை, மிளகு சரியிடையாக வாங்கி சூரணம் செய்து உள்ளுக்கு கொடுக்கவும் தீரும். அருகம் வேர் பலம்.ரு, மிளகு பலம்.½, மாதளம்பூ, அதிமதுரம், குண்டுமணித் தளை சுகைநீர் இதுகள் வகைக்கு பலம்.½, சூரணம் செய்து தண்ணீர்விட்டவைத்துப் பிசறிப் போடவும். ஆவின் வெண்ணெயில் குழைத்துப் போடவும் தீரும். ரு-நாள் 6 வேளை போடவும். பருதிக்காய், எலுமிச்சம் பழம், சரியிடை அரைத்து சீனி சர்க்கரை கலந்து ரு-நாள் 6 வேளை சாப்பிடத் தீரும். சுரைக்காய் சுட்டு எடுக்கவும். புளித்த மோரும் சேர்த்து கொடுக்கவும். வீறும் தணியும் நல்லது ஆகும்.

முருங்கை பீர்க்கு பலம்.உ, ஆவாரம் வேர்ப் பட்டை பலம்.க, ஈர வெங்காயம்.10 இதுகளை அரைத்து ஐந்து நாள் 10 நேரம் சாப்பிடவும் தீரும், மருந்துகளினால் காணும் பேதியும், ரெத்தமும் தீரும்.

<u>பாஷாணங்களும் சேர்ந்தால் அதற்கு முறிவு:-</u>

மிளகு, சிறுகீரை, நீலித்தளை, துளசித்தளை, பாகல்தளை, கொடுப்பத் தழை, கோவைத் தளை, உப்புசலி, ஏரண்டத்தளை, எலுமிச்சந் தளை, குருட்டு வேலாம்பட்டை, ஆவரம் வேர்ப்பட்டை, கோவை வேர், தாளிக்காய், கடுக்காய் தாமரைக்கிழங்கு, மஞ்சள் இதுகள் சேர்த்து சூரணம் செய்து கோரைக்கிழங்கு படி.½, நாகக் கொழுந்து இரண்டு பிடி போட்டு இடித்து உருண்டை செய்து கொடுக்கத் தீரும். வெந்நீரில் கொடுக்கவும்.

<u>அபினி சாப்பிட்டு மயக்கம் மீறினால் முறிவு:-</u>

ஆவின் நெய், சங்கம் பழம், வெந்த கறியும் சேர்த்து சாப்பிடவும். எருக்கம் பாலுக்கு முறிவு:- எள்ளும் சர்க்கரையும் அரைத்துச் சாப்பிட நீங்கும். குன்று மணிக்கு முறிவு:- வெங்காரத்துக்கும் முறிவு:- வெங்காரமும், வெத்திலையும்

நல்லெண்ணெயில் குடித்தவர்க்கு முறிவு:- தேங்காய்ப் பால் ஆட்டிச் சாப்பிடத் தீரும்.
கஞ்சந் தளைக்கு முறிவு:- ஈரவெங்காயம் எலுமிச்சம் பழம் இதுகளை சாப்பிட அதனுடைய வீரத்தைத் தணிக்கும்.
கள்ளிப் பாலுக்கு முறிவு:- வாழைப்பட்டைச் சாறு சாப்பிடத் தீரும்.
எருக்கம் பாலுக்கு முறிவு:- கருவேலம் பட்டையை எருமை மோரு விட்டு அரைத்துச் சாப்பிடத் தீரும்.
செருங்கொட்டைக்கு முறிவு:-பூவரசம் பட்டைச் சாறு பிழிந்து நல்லெண்ணெயும், புளியும் கரைத்துச் சாப்பிடத் தீரும். தாளிக்காயும் சேர்த்து சாப்பிடத் தீரும்.
பாஷாணம் திராவகங்களுக்கு முறிவு:- மிளகை அரைத்து எருமை வெண்ணெயில் குழைத்து சாப்பிடவும் தீரும். எருமை வெண்ணெயில் சந்தனத்தை கரைத்து உடம்பில் பூசத் தீரும்.
வீரத்துக்கும் ரசத்துக்கும் முறிவு:- கோழிமுட்டை, வெள்ளைக் கருவு எடுத்து தண்ணீரில் கலந்து பூசினால் அதனுடைய வீரம், தணியும். அவுரிக்கு விஷம் தணிய முத்தின சாட்டரணை வேர் சூரணம் செய்து சாப்பிட அதனுடைய வெப்பந் தணியும்.

<u>நெஞ்சு அடைப்புக்கும் மூச்சு தப்புக்கும் நெஞ்சு வலிக்கும் இதுகளுக்கு மருந்து</u>:-

முசுமுசுக்கை வேர் விராகனிடை.க, மேற்கண்ட தழைச் சாறு படி.1/8, முக்காவேளை வேர் விராகனிடை.க, மேற்கண்ட தழை சாறு படி.1/16, ஆவின் பால் படி.$\frac{1}{4}$, அதில் காய்ச்சி சாப்பிட தீரும்.

<u>சிரசு புழு வெட்டுக்கு:- மீசை கண்ணு மயிர் உதிர்வதற்கு மருந்து</u>:-

ஆனைத் தந்தத்தைச் சுட்டு தேனில் குழைத்து தடவ தீரும். மாங்கொட்டைப் பருப்பு எலுமிச்சம் பழச்சாறு, நார்த்தம் பழச்சாறு, கொழுஞ்சிப் பழச் சாறு, மாதுளம் பழச் சாறு, விளாம் பழச் சாறு மேற்கண்ட பட்டைச் சாறு, சகலம் அரைத்து பாலில் போட்டு கொதிக்க வைத்து பூசினால் மயிர் கழிதல் மாறும். மயிர் வளரும்.

<u>சோறு செமியாதே யிருந்தால் அதற்கு மருந்து</u>:-

ஒரு பிடி பிரண்டையை வேகவைத்து காய வைத்து அதில் ஓமம் படி.$\frac{1}{2}$, வறுத்துச் சூரணம் செய்து அதில் பேரீச்சம் பழம் போட்டு இடித்து லேகியம் செய்து சாப்பிட நல்லது ஆகும்.

<u>குழந்தை பெத்த பெண்களுக்கு தோஷமும் கண்டால் அதற்கு மருந்து</u>:-

<u>சீய் கட்டிவிழும் நல்லது ஆகிறதுக்கு மருந்து</u>:-

சுக்கு, மிளகு, திப்பிலி, அக்கலாக்காரம், அதிமதுரம், சீரகம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, மாசக்காய் வகைக்கு தோலா.$\frac{1}{2}$, வேப்பம்பட்டை பலம்.க, மஞ்சள் பலம்.$\frac{1}{2}$, கஸ்தூரி விராகனிடை.க, கோரோசனை விராகனிடை.க, சூரணம் செய்து தேன் விட்டுப் பிசைந்து சாப்பிடத் தீரும்.

<u>மேகத்தினால் பிறந்த புண்களுக்கு அரையிலும், மாணியிலும் உண்டானதற்கு மருந்து</u>.

விளக்கெண்ணை படி.$\frac{1}{4}$, ஆவின் பால் படி.$\frac{1}{4}$, வெந்தயம், வெங்காயம், மயிர் மாணிக்கந் தழை வகைக்கு பலம்.க அரைத்துப் போட்டுக் காய்ச்சி சாப்பிட ஆறும்.

<u>சகல கணம் பிறவிய கணங்களுக்கு மருந்து</u>:-

விளக்கெண்ணை படி.க, அவரி தழைச் சாறு வேலிப்பருத்திச் சாறு, முடக்கொத்தான் சாறு, தும்பைச் சாறு, கவுதும்பைச் சாறு, இச்சி வேர், சாறு புண்ணாக்கு பூண்டு சாறு, கண்டங்கத்திரிச் சாறு வகைக்குச் சாறு படி.1/8, புளியம் பிரண்டைக் கிழங்கு, அப்புக் கோவைக் கிழங்கு, கலப்பைக் கிழங்கு, வெள்ளைப் பூண்டு, ஈர வெங்காயம், கஸ்தூரி மஞ்சள், சீரகம், வசம்பு, இதுகள் வகைக்கு ஒரு எலுமிச்சங் காய் பிரமாணம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி ஒரு சங்களவு சாப்பிடவும்.

<u>நெஞ்சு பித்துக்கு மேலெங்கும் பித்துகிறதுக்கு</u>:- இஞ்சிச் சாறு படி.1/8, பூண்டுச் சாறு

படி.1/8, வெதுப்புடன் சாப்பிடத் தீரும். 3-நாள் 6 பொழுது சாப்பிடவும். தீராவிட்டால் உப்பிலியந் தழை ஒரு பிடி, ஈக்கு, மிளகு வகைக்கு பலம்.½, பூண்டு பலம்.½, கொதிக்க வைத்து சாப்பிடத் தீரும். பத்தியம் புளிப்பான் பதார்த்தம் தள்ளவும்.

செரியா மாந்தத்துக்கு:-

வசம்பு, சடாமஞ்சி, பூண்டு, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், ஆடை ஒடு, சரியிடை அரைத்து குளிகை செய்து வெந்நீர் தண்ணீரில் கொடுத்திருல் உடனே கழிச்சல் நிற்கும்.

நரை மயிர் கறுப்பு மயிர் ஆகிறதுக்கு:-

அழிஞ்சி, புங்கு, தாளிக்காய், புங்கங் காய் இவைகள் வித்து கடுக்காய் கார்போகரிசி, மிளகு இதுகளை சரியிடையாக அமுரி சாத்தில் ஊற வைத்து 20-நாள் ஊற வைத்து சூரணம் செய்து சாப்பிடவும்.

தொண்டை கட்டுக்கு:-

நந்தியா வட்டம், நாய்த்துளசி, சிவதை வேடாம் தழை, துளசி, ஆடாதொடை இதுகளின் வேறு அரைத்து கொட்டகாய் பிரமாணம் கண்டங்கத்திரி, ஆடாதொடை, ஊசி, பொடுதலை, மணத்தக்காளி, கொட்டைக் கரந்தை, குப்பை மேனி, கோழிய வரை சமமாக இடித்து சாறு படி.½, விளக்கெண்ணெ படி.க, பதமாக காய்ச்சி சாப்பிட தொண்டைக் கட்டு நீங்கி நல்லாப் பேசலாம்.

வீடு மாந்த கணம், ஊது மாந்தக் கணம், அந்தக் கணம், மந்தார கணம், எரி கணம், இந்த படி குழந்தைகளுக்கு வரும் கணங்களுக்கு மருந்து:-

ஈரவெங்காயம், எலுமிச்சம் பழம், கோவை வல்லாரை, மாசிப்பத்திரி, வில்வம் குட்டி விலாம் இவைகளின் சாறு அத்திப் பால் ஆலம் பால், மூலைப் பால், ஆவின் பால், வெள்ளாட்டுப் பால், ஆவின் நெய், தேன் வகைக்கு படி.¼, தேங்காய் பால் படி.½, அறுகம் வேர், சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர் வகைக்கு பலம்.½, சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தாளிக்காய், நெல்லிக்காய், சடாமஞ்சி, அதி விடையம், மாசக்காய் வகைக்கு பலம்.¼, நெய் படி.½ பதமாய்க் காய்ச்சி சாப்பிடவும்.

கெண்டைக் கால் வாதத்துக்கு:-

மான் செவிகள்ளியிலை, சாத்தை மூன்று நாள் அரைத்துப் பூசவும். மேற் கண்டவை கொஞ்சம், கொஞ்சமாய் சாப்பிடவும் நல்லது ஆகும்.

புண்ணுக்கு மருந்து:-

சாதிலிங்கம், ரசகர்ப்பூரம், காவிக்கல்லு, ஏலம், கோரோம்பை, கஞ்சி வார்த்து அரைத்து உருண்டை செய்து மாசி பத்திரி கசாயத்தில் சாப்பிட தீரும்.
மேகப் புண்ணுக்கு:- விளக்கெண்ணெ சங்கஞ் சாறு, கொடிக்கள்ளிச் சாறு, வெங் காயச் சாறு, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், காய்ச்சி புண்ணுக்கு தடவத் தீரும்.

கொடிக் கள்ளி வாட்டி சாறு பிழிந்து தேங்காய் பால் பிழிந்து அதில் துரிசு அரிதாரம்கெந்தகம் அரைத்துப் போட்டு காய்ச்சி புண்ணுக்கு பூசவும் தீரும்.

பேய்ச் சொறிக்கு மருந்து:-

இந்துப்பை அரைத்து நெய்யில் போட்டு வெய்யிலில் வைத்து உடம்பில் பூசத் தீரும். சிந்திக் கொடி வேப்பம் பட்டை, பேய்ப்புடல் வகைக்கு பலம்.க, ஒரு படி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி சங்களவு அதில் கடுக்காய், தாளிக்காய்,

நெல்லிக்காய், சந்தனம், செஞ்சந்தனம், மரமஞ்சள் விலாமிச்சம், தக்கோலம், கோஷ்டம் தேவதாரம், மஞ்சள் வகைக்கு விராகனிடை.உ அரைத்துப் போட்டு உமிக் காந்தலில் போட்டு வேளை ஒன்றுக்கு காசிடை வீதம் சாப்பிட தீரும். இச்சா பத்தியம்.

ஊறுத புண்ணுக்கு:-

வெத்திலை, மிளகு, தக்காளி இவைகள் எருக்கிலைப் பழுப்பு, சாறு கூவளைச் சாறு நல்லெண்ணை, சுக்கு, மிளகு, வசம்பு, திப்பிலி சரியிடை காய்ச்சி தடவத் தீரும்.

ஊறுத புண்ணுக்கு:-

முருங்கைப் பூவு, எருக்கம் பூவு, எருக்கம் பழுப்புச் சாறு கலப்பை கிழங்கு.ங, காசிடை அரைத்து ஆவின் நெய்யில் காய்ச்சி புண்ணுக்கு பூசவும். எவச்சாரம், இந்துப்பு சீரகம், வெங்காரம், கோமியத்தில் மருந்து போட்டு சாப்பிட புண்ணுகள் ஆறும்.

சிரங்கு புண்ணுக்கு:-

வெங்காயம் இடித்து சாறு பிளிந்து அதில் எவச்சாரம், இந்துப்பு, சீரகம், வெங்காரம், இதுகளை கசாயம் செய்து சாப்பிடத் தீரும்.

கரப்பான் புண்ணுக்கு:-

அபிதாரம் பலம்.¼, செருங்கொட்டை 10 நறுக்கி நல்ல எண்ணெயில் போட்டுக் காய்ச்சி புண்ணுகளுக்குப் பசவும்.

கரப்பான் புண்ணுக்கு:-

செங்கத்தாரி கருநொச்சி, மூடக்கொத்தான் கழுச்சிக் கொடி, புங்கு, சங்கு, சங்கங் குப்பி, புண்ணுக்கு பூண்டு, சிறுசெருப்படை, ஊசி பொடுதலை குதிரை மகுந்தல், சிறுவன் தாடி பூண்டு, உத்தாமணி, சித்திரமூலம், வெள்ளருகு,

வாத கரப்பான் புண்ணுக்கு:-

ஆவரை, சங்கு தாரைகொடி, சிறுநெருஞ்சி, நீர்முள்ளி, ஈருள்ளி இதுகளைச் சரியிடை கசாயம் செய்து அதில் வெங்காரம் பொடி செய்து போட்டு சாப்பிடத் தீரும்.

ஊறுத புண்ணுக்கு மருந்து:-

தேங்காய் எண்ணெயை தடவி அதின் மேல் சங்கம் இலையை கசக்கி சூரணம் செய்து புண்ணின் பேரில் ஆவத் தீரும்.

தாது விர்த்திக்கு:-

ஒரு படி ஆவின் பாலில் ஙு பலம் சீனி சர்க்கரையை கரைத்து பாகு செய்து கோழி முட்டையை உடைத்திக் காய்ச்சி இறக்கி வைத்து சூரணம் போட்டு லேகியம் செய்து சுக்கு, மிளகு, திப்பிலி, சாறுபருப்பு கசகசா, கிராம்பு, யேலம், சாதிக்காய், சாதிபத்திரி, அதிமதுரம், கூகைநீறு, கோஷ்டம், சட்டாமஞ்சி, சன்ன லவங்கப் பட்டை, கஞ்சத் தழை வகைக்கு பலம்.க, இதுகளை இடித்து சூரணம் செய்து லேகியம் கிளறி தேன் விட்டு பிசைந்து சாப்பிடத் தாது விர்த்தி உண்டாகும்.

கீழா நெல்லித் தயிலம்:-

கீழாநெல்லி குட்டி பண்டு ஆள் அதின் சாறு படி.½, நல்லெண்ணை படி.க, ஆவின் பால் படி.½, சீரகம் பலம்.2, அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகவும் நோவுகள் எல்லாந் தீரும்.

நெல்லிக்காய் தயிலம்:-

நெல்லிக்காய்ச் சாறு படி.ங, பொன்னாங்கண்ணிச் சாறு படி.½, மெரிச் சாறு படி.½, இளநீர் படி.ங, சிறுகீரைச் சாறு படி.½, ஆவின் பால் படி.ங, நல்லெண்ணை படி.உ, அதிமதுரம், கோஷ்டம், எலம், குரோசானி, சீமம், பூலாங் கிழங்கு,

கஸ்தூரி மஞ்சள், சடாமாஞ்சி, சீரகம், சாதிபத்திரி, சாதிக்காய், லவங்கப் பத்திரி, வால்மிளகு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிக் காய், புந்தி பட்டை, லவங்கப் பட்டை, வால் மிளகு, சோம்பு வகைக்கு விரா கனிடை.க, ஆவின் பாலில் அரைத்து போட்டுக் காய்ச்சி முழுகி வர நோவுகள் எல்லாந் தீரும்.

<u>பொன்னாங்கண்ணித் தயிலம்:-</u>

முழுகிவரில் உட்காச்சல், உஷ்ணம், கைய் கால், உடம்பு எரிவு, கண்ணெரிவு கபால நோவு நீங்கும். தேகம் ஊத்தல் குன்மம் நீங்கும்.

பொன்னாங்கண்ணிச் சாறு படி.க, நல்லெண்ணை படி.க, அதிமதுரம், கோஷ்டம் சீதா செங்கழுநீர் பூண்டு, கருஞ்சீரகம், அறுகம் வேர் பலம்.5 இடித்து மை போல் அரைத்து நல்லெண்ணை படி.க, கூட விட்டுக் கோரைக் கிழங்கு, பூமி சர்க்கரைக் கிழங்கு அமுக்கிலாங் கிழங்கு வகைக்கு பலம்.க, அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகி வந்தால் தீரும்.

<u>வில்வாதி தயிலம்:-</u>

மேகநீர்.20, பித்தம்.40, குன்மம் .8, சிரசு நோய் குணமாகும்.

வில்வ வேர் பலம்.10, விலாமிச்சம் பலம்.க, கோரைக் கிழங்கு பலம்.க, வாழைக் கிழங்கு பலம்.க, நல்லெண்ணை படி.உ, கொம்பரக்கு பலம்.உ, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், கஸ்தூரி, அதிமதுரம், கோஷ்டம், கருஞ்சீரகம், நல்ல சீரகம், மரமஞ்சள், சந்தனம், கிரியும் பட்டை, பூச்சாந்து பட்டை, செவ் வள்ளிக் கொடி, லவங்கப் பட்டை, பூலாங் கிழங்கு, ஏலம், வகைக்கு பலம்.¼, பாலி பாலில் அரைத்து போட்டு காய்ச்சி முழுகத் தீரும்.

<u>பித்த பயித்தியத்துக்கு:-</u>

அழிஞ்சி வேர், செவியம், பெருமுட்டி, அரத்தை, சுக்கு, சித்திரமூலம் பூசணி வேர் இவைகள் வகைக்கு பலம்.½, தூள் செய்து துணியில் முடிந்து போட்டு படி தண்ணீரில் வேக வைத்து கொடுக்கத் தீரும்.

<u>சன்னி பதினெட்டுக்கு:-</u>

கெந்தகம், ரசம், காரீயம், வெள்ளீயம், லிங்கம் சரியிடை கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய் சரியிடை அரைத்து குன்று மணி போல் உருண்டை செய்து இஞ்சி சாத்தில் கொடுக்கத் தீரும்.

சன்னிக்கு வெங்காரம், இரும்பு பொடி, இய்யம் வெள்ளீய்யம், ரசம், சாதிலிங்கம், தாம்பரம், கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், சரியிடை அரைத்து எலுமிச்சம் பழச் சாத்தில் அரைத்து சிறு குன்றுமணி போல் உருண்டை செய்து அநுபானங்களில் சாப்பிடத் தீரும்.

<u>சன்னி பதின்மூன்றுக்கு:-</u>

ரசம், தங்கம், வாழைக்கிழங்கு, திப்பிலி, சங்கு, கெந்தகம், மிளகு, முத்து, சித்திரமூலம், சரியிடையாக அரைத்து உருண்டை செய்து இஞ்சி சாத்தில் சாப்பிடத் தீரும்.

<u>சன்னி பதின்மூன்றுக்கு நிவர்த்தி:-</u>

வேப்பெண்ணை படி.க, விளக்கெண்ணை படி.ங, நல்லெண்ணை படி.ங, ஒன்றுகக் கலந்து வறப்பூலா துளசி, வேலிப்பருத்தி, அமுக்லாம், தைவேளை, எருக்கு, சிவதை, அரத்தை, ஆதண்டை, குப்பை மேனி, பிரண்டை, நொச்சி, சித்திரமூலம் இசுகளை அரைத்து எலுமிச்சங் காய் பிரமாணம் அரிதாரம், திப்பிலி காயம் வெங் காரம், சுக்கு, சீரகம், ஓமம், மல்லி, கடுகு, மிளகு, பூண்டு, கிராம்பு, சாதிக்காய், நாடி முத்து வகைக்கு விராகனிடை.க, காய்ச்சி உடம்பெங்கும் பூசவும்.

சகல சன்னிக்கு தயிலம்:-

கடுக்காய் சிவக்ரை வேர், குப்பை மேனி வேர், பிரம்பட்டை, முருங்கைப் பட்டை பூண்டு, ஓர் நிறையாய் கூட்டி முலைப் பாலில் அரைத்து வெய்யிலில் வைத்து சீலையில் வைத்து மூடிந்து நாசியில் புளியவும். உள்ளுக்கு கொடுக்கவும்.

பாண்டு, சோகை, காமாலை, விஷ பாகம், வீக்கத்திற்கு நிவர்த்தி:-

கோழங் கட்டி பலம்.8, மாவிலிங்கந் தளை, நீர்முள்ளி சமூலம், கீழாநெல்லி, சமூலம், கரிசிலாங் கண்ணி வகைக்கு பலம்.5, சீரகம் பலம்.க அரைத்து தயிரில் சாப்பிடத் தீரும்.

(வேறு) குப்பை மேனி முள்ளி, நீர்முள்ளி, அமலை, நாறத்தை, நொச்சித் தழை, வட்டி விளாந்தழை, பொரும்பித் தழை, பிபொரும்பித்தளை, கழச்சித் தளை, நன்னாரி வாழைக்கிழங்கு சரியிடையாக அரைத்து உருண்டை செய்து சாப்பிடத் தீரும். கடுக்காய் சுக்கு, அரைத்து உருண்டை செய்து சாப்பிடத் தீரும்.

வறக் காமாலைக்கு மருந்து:-

மணத்தக்காளி, சமூலம், கீழா நெல்லி சமூலம், எலுமிச்சங் காய் பிரமாணம் சாப்பிட எருமைத் தயிரில் சாப்பிடத் தீரும்.

இதுவும்:- கடுக்காய்.20, மிளகு பலம்.க, மாவிலிங்கப் பட்டை, கத்தாளை வேர், மேற்கண்ட சமனு அழக்கிலாம், அறுகம் வேர் சூரணம் செய்து திரிகடி பிரமாணம் சாப்பிடவும் தீரும்.

பாண்டு வீக்கம், காமாலை, விஷ பாகம் வீக்கம் இதுகள் தீர மருந்து:-

வில்வத் தளையை ஆவின் நீர் விட்டு இடித்து சாறு பிழிந்து 1/8 படி வீதம் 3 நாள் 6 வேளை சாப்பிடத் தீரும்.

வீக்கத்துக்கு.-

தாளித் தளை, சங்கந் தளை, சுரைத் தழை, சிறுநெருஞ்சி, குறிஞ்சாந்த ள, நீர் முள்ளி, வெங்காயம், வெங்காரம், சமனாக அரைத்து உருண்டை செய்து சாப்பிடத் தீரும்.

குழந்தைகளுக்கு வயிறெடுப்புக்கு:-

சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், பூண்டு, கசசத்தளை, புளைக் காஞ்சொறி வேர் எலுமிச்சம் பழத் சாத்திலரைத்து உருண்டை செய்து தும்பைத் தளை, குப்பை மேனி கசாயம் செய்து குளிகையை உரைத்து ஊத்தவும்.

ஆறாத புண்ணுகளுக்கு:-

சாதிலிங்கம், பூரம், ஏலம், புங்காவிக் கல்லு, கோரும்பை மாவு அரைத்துப் புண்ணின் மேல் போட்டு வரவும்.

சகல பீனிசம் மண்டை குத்தலும் தீரும் மருந்து:-

தேங்காய்ப் பால், நல்லெண்ணை, ஆவின் பால், எலுமிச்சம் பழச் சாறு வகைக்கு படி.¼, கூட்டி கார்போகரிசி, சித்தரத்தை வலம்புரிக்காய் வகைக்கு தோலாக காய்ச்சி தலை முழுகத் தீரும்.

குன்மத்திற்கு:-

நொச்சி, நிலாவாரை, கொன்னை கழச்சி, ஆதண்டை, முருங்கை, கண்டங் கத்திரி, உள்ளி வகைக்கு பலம்.உ, விளக்கெண்ணையில் போட்டுக் காய்ச்சி சாப்பிடத் தீரும்

பித்த மேகம், உடம்பெரிவு, வெட்டை, கண் கால் காந்தல் குணமாகும் மருந்து:-

நல்லெண்ணை படி.½, ஆவின பால் படி.½, சந்தனத் தூள் பலம்.க, அரைத்துப் போட்டு திருமஞ்சளப் பொடி பலம்.½ போட்டு முழுகவும்.

சகல மேகம் மூலங்கள் நெடு நாளைய நீர்க் கட்டுக்கு:- எள்ளு, சாம்பல், பூசனி,

வெங்காயம், எலுமிச்சம், ஒரிலைத்தாமரை, வெந்தயம், கோரோசனை, குங்குமப் பூ சரியிடையாகப் போட்டுஇடித்து சூரணம் செய்து சாப்பிடத் தீரும்.

சிறு சந்ததுதி தயிலம்:- மேகத்துக்கு:- 21.9.63.

சந்தனம், விலாமிச்சம் வேர், ஆவாரம் பட்டை, வகைக்கு சாறு படி.¼யாகப் பிழிந்து நல்லெண்ணை படி.க, கூட விட்டு நன்னாரி பலம்.க, அரைத்துப் போட்டு காய்ச்சி முழுகி வந்தால் மேகம்.20-ம் தீரும். ஆடு தீண்டாப் பாளைச் சாறு நல்லெண்ணை கலந்து காய்ச்சி முழுகத் தீரும்.

கபால வலி குத்தல், மூலை பீனிசம், நேத்திர நீர்க் கடுப்பு மேக கட்டுக்கு:-

சங்கம் வேர் சாறு படி.½, நல்லெண்ணை படி.க, மிளகு, கருஞ்சீரகம், ஏலம், மாசக்காய் வகைக்கு பலம்.½ அரைத்துப் போட்டு காய்ச்சி ஆவின் பால் படி.½ கூட விட்டு காய்ச்சி முழுகவும்.

வயிறு எடுப்புக்கு:-

புண்டு, சுக்கு, மிளகு, வேப்பம் பூ, பெருங்காயம், வசம்பு அரைத்து வெள்ளீரில் ஊத்தவும். பத்தியம், உப்பு, புளி, கடலை, பொரி காறவடை கருவாடு மீன்,

மேகத்துக்கு:-

கோவை பொன்முசுங்கன்னி, வல்லாரை, செருப்படை, ஆனை நெருஞ்சி, சீந்தி சமூலம், பூவரசம் பட்டை, சாதிக்காய், மாசக்காய், கடுக்காய்ப் பூ, செண்பகப்பூ, சிறநாகப்பு, குரோசாணி ஓமம் வகைக்கு பலம்.½ சூரணம் செய்து நல்லெண்ணெயில் சாப்பிடத் தீரும்.

யோனி புத்து லிங்கப் புத்து, புண் சீய் ரத்த மூலை பிரமியம் தீரும்.

சிரங்குகளுக்கு:-

ஆவாரை தழை, சங்கந் தழை, சுரைக்காய்த் தளை, நெருஞ்சித் தளை, நீர்முள்ளித் தளை, ஈர வெங்காயம் இதுகளை கசாயம் போட்டு சாப்பிடவும்.

பித்த குன்மம், சத்தி குன்மம், எரிகுன்மம், நிவர்த்தி:-

கடுக்காய் பலம்.5, நிலாவாரை பலம்.[illegible], அதிமதுரம், கோஷ்டம், ஏலம், லவங்கப் பத்திரி, சிறநாகப்பூ, தாளிச நிலப்பனைக் கிழங்கு, விளாம்பழம், கறியுப்பு, சீரகம் சரியிடை சூரணம் செய்து சாப்பிடத் தீரும்.

குன்ம வலிக்கு:- சுக்கு, ~~சீரகம்~~, வெங்காரம், ஓமம், மிளகு, தும்பைத்தளை சரியிடை சூரணம் செய்து சாப்பிடவும். மோர் சாப்பிடவும்.

நீரடைப்புக்கு:- திப்பிலி, கிராம்பு, இந்துப்பு, வெடியுப்பு, வகைக்கு விராகனிடை.க சுக்கு, அதிமதுரம், அமுக்குலாம், ஏலம் வகைக்கு விராகனிடை.உ தானிக்காய், செண்பகப்பூ, கோஷ்டம், காஞ்சிரம் வேர் வகைக்கு விராகனிடை.3, அதிவிடையம், சந்தனம், நெல்லிவத்தல், கல்நார், சீரகம், லவங்கப் பத்திரி வகைக்கு விராகனிடை.4 ஓமம் விராகனிடை.3/4, மிளகு, விலாமிச்சம், சிவனர் வேம்பு வகைக்கு ஒரு பிடி கடுக்காய் 10 இடித்துச் சூரணம் செய்து சாப்பிடவும். எள்படி.¼, வெங்காயம், எலுமிச்சம் பழம், செப்பு, நெருஞ்சி, கரிசிலாங்கண்ணி, கற்பூரவல்லித் தளை, பூவரசங் காய், சங்கம்பப்பி, இதுகள் சரியிடையாக சூரணம் செய்து சாப்பிட மேகம், சாங்கை, வாய்வு, கிரந்தி, அரையாப்பு, யோனிப்புண், வெடிமூலை தீரும். மண்டை வலி, சிரசு, பாரம், பீனிசம் தீரும்.

அரைக்கீரை, சாறு படி.க, நல்லெண்ணை படி.க, அதில் கஸ்தூரி மஞ்சள் மிளகு, கருஞ்சீரகம் வகைக்கு பலம்.க, மேற்கண்ட சாத்திலரைத்து போட்டுக் காய்ச்சி முழுகி வரத் தீரும்.

எட்டு விதக் கணம் மாந்தம், தாகம் தோஷங்கமுடி மேசம் விஷ நோய் ஈளை இருமல்

<u>இளைப்பு, உள்ரம் இவைகளுக்கு மருந்து:-</u>

அன்னபேதி, கோஷ்டம், ஏலம், கிராம்பு, சந்தனம், கடுகுரோகணி, இலுப்பை
பூ, நன்னாரி வேர், விலாமிச்சம், வெட்டி வேர், அதிமதுரம், திப்பிலி, கோரைக்கிழங்கு,
கரிசிலாங்கண்ணி, முந்திரிப்பழம், பேரீச்சம் பழம், புளியம் விரை மேல் தோல் ஓரிலைத்
தாமரை, சிறுகீரைத் தளை, காளி மரத்து தளை, வல்லாரைத் தளை, சாதிக்காய் பத்திரி
சண்பகப்பூ, கல்நார், திப்பிலி, விலாமிச்சம், நல்லசீரகம், உத்திராட்சம், கோரோசனை
பொன்னாங்கண்ணி, கரிசிலாங்கண்ணி, குப்பை மேனி, மான் கொம்பு, கிளுவப் பட்டை,
வேலாம்பட்டை, இண்டங் கொழுந்து, காசுக் கட்டி, வெங்காயம், கோஷ்டம், தக்கோலம்
வெங்காரம், கத்தாளை, வெந்தயம், சங்கந்தளை, ~~வெள்~~ வேலி பருத்தி தளை, பூவரசந் தளை,
ஆடாதோடை, சாட்டணை, பொரும்பித்தளை, வேளைத்தளை, ஓமம், வசம்பு, புண்கு
இது வெல்லாம் வகைக்கு பலம்.½ போட்டு சூரணம் செய்து சாப்பிட முன்னிட்டுச் சொன்ன
வியாதிகள் தீரும். ~~கிரந்தி~~

<u>கிரந்தி கூட்டம் தீரும். மருந்து:-</u>

சிவனார் வேம்பு பலம்.½, வாலுளுவை அரிசி பலம்.க, தாளிச பத்திரி பலம்.½,
கிராம்பு, ஏலம், அதிமதுரம், கோஷ்டம், சாதிக்காய், சாதிபத்திரி, சிறுநாகப்பூ,
வால்மிளகு, வகைக்கு பலம்.½ இடித்து சூரணம் செய்து சேங்கொட்டைச் சூரணம் கலந்து
சாப்பிடத் தீரும்.

<u>வியாதிகளுக்கு தலைமுழுக எண்ணை:-</u>

திப்பிலி, கிராம்பு, சுக்கு, மதுரம், அமுக்குலாம், ஏலம், தாளிக்காய், கடுக்காய்,
சென்பகப்பூ, கோஷ்டம், காஞ்சிரம் வேர், அதிவிடயம், சந்தனம், நெல்லிவத்தல்,
சீரகம்,லவங்கப் பத்திரி, ஓமம், மிளகு, விலாமிச்சம் வேர், சிவனார் வேம்பு இந்த
சரக்குகள் வகைக்கு விராகனிடை.உ நாள் செய்து நல்லெண்ணை படி.1½, அதில் அரைத்து
போட்டுக் காய்ச்சி முழுகி வரக் குணமாகும்.

வேலி பருத்தியிலை ஒரு பிடி, இந்துப்பு பலம்.க, ஓமம் பலம்.க, திப்பிலி
பலம்.க, காயம் பலம்.½ சூரணம் செய்து சாப்பிட வயத்து வலி, உப்பிசம், பொருமல்
தீரும்.

<u>குன்மம் வயத்து வலி, பொருமலுக்கு:-</u>

வசம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கருஞ்சீரகம், சண்பகப்பூ, அதிமதுரம்
பட்டை, காயம், திரிபலை, எருக்கம் பூ, கற்பூரம், சவுட்டுப்பு, கறியுப்பு, இந்துப்பு
வகைக்கு சரியிடையாக இடித்து சூரணம் செய்து சாப்பிட்டு வந்தால் தீரும்.

தீரும் லேகிய ரசாயனமும் தெளிய அறிய மானிடர்க்கு
சாரும் பிணிகள் தானகல தயவாய் பலநூலாராய்ந்து
சேரும் பாகம் பிசகாமல் தெளிய உரைத்த பண்டிதன் தான்
மேரு முனிவர் தான் கூடி மெய்யா யுரைத்த திந்நூலே.

தண்ணிமுட்டான் கிழங்கு பலம்.½, கோரைக் கிழங்கு பலம்.½, பிரண்டை பலம்.க,
நாய்வேளை பலம்.க, கண்டங்கத்திரி பலம்.க, பிரப்பங் கிழங்கு பலம்.ங, அமுக்கிலாங்
கிழங்கு பலம்.½, கொத்தமல்லி விராகனிடை.ங, சித்தரத்தை விராகனிடை.ங,
கோஷ்டம் விராகனிடை.ங, லவங்கம் விராகனிடை,ங, வெட்டி வேர் விராகனிடை.5,
கன்கநீர் விராகனிடை.5, விலாமிச்சம் விராகனிடை.5, தாளிச பத்திரி விராகனிடை.5,
கடுகுரோகணி விராகனிடை.5, குங்குமப்பூ விராகனிடை.5, சாதிக்காய் விராகனிடை.5,
சாதிபத்திரி விராகனிடை.5, அதிவிடயம் விராகனிடை.5, ஏலம் விராகனிடை.5, திராட்சி
பலம்.½, பேரீச்சம் பழம் பலம்.½, சீனி சர்க்கரை வீசை.½, பாகு செய்து மருந்து
போட்டு எடுத்து தேன் விட்டு பிசைந்து வேளைக்கு கொட்டை பாக்கு பிரமாணம் சாப்பிட
மண்டலம்.

நீர் இழிவு, நீர்க்கடுப்பு, ரத்தம் வடிதல்; மேலிளைப்பு, சித்தப் பிரமை; வெட்டை வெடி, சூலை, அண்ட வாய்வு, கன்ன புத்த மகோதரம், விக்கல், அதிசாரம், சலக்கழிச்சல், மூலபாண்டு, காமாலை, சோகை, காசம், அஜீர மாந்தம், குன்மம் குட்டம், கிறுகிறப்பு, கபால வாய்வு, கண்ட சூலை முதலியவை தீரும்.

இடிப்பு குடைச்சல் மூலம் வாய்வு குன்மம் தீரும்.

<u>மருந்து :-</u>

பறங்கிப்பட்டை பலம்.ச, அரத்தை, சிறுநாகப்பூ, சுக்கு, சிறுதேக்கு, சீரகம் திப்பிலி, தாளிச பத்திரி, தேசாவரம், கருஞ்சீரகம், கோஷ்டம், வால்மிளகு, அதிமதுரம், ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, சதகுப்பை, குங்குமப்பூ, சடாமஞ்சி வகைக்கு பலம்.¼, கருவப்பட்டை மல்லி மலைதாங்கி வேர், கடுக்காய், தானிக்காய் நெல்லிக்காய், அமுக்கிலாம் வேர், புன்னைக்கு பூண்டு, சித்திரமூலம், மிளகு, சிராம்பு, சிவனார் வேம்பு, கோரைக்கிழங்கு, வகைக்கு பலம்.½ இடித்து சூரணம் செய்து சமன் நாட்டு சர்க்கரை சலத்து சாப்பிடத் தீரும்.

குன்மத்திற்கு நொச்சி, நிலாவாரை, கொன்றை, கழச்சிக் கொடி, ஆதண்டை, முருங்கைப்பட்டை, சிவதை, கண்டங்கத்திரி, ஈர வெங்காயம், இந்துப்பு வகைக்கு பலம்.க, இடித்து சூரணம் செய்து கள்ளிப் பாலை சுட்டு பலம்.½ சேர்த்து இடித்து சூரணம் செய்து விளக்கெண்ணை விட்டு பிசைந்து சாப்பிட நல்லது ஆகும்.

<u>குன்மத்திற்கு :-</u>

சித்திரமூலம், புனலி தண்டு, நிலாவாரை, குமரி வகைக்கு பலம்.க, பூண்டு பலம்.5 இடித்துச் சூரணம் செய்து திரிகடி பிரமாணம், நெய்யில் சாப்பிடத் தீரும்.

<u>குன்மத்திற்கு :-</u>

இஞ்சி சிவதை, சீந்தி சூரத்து நிலாவாரை, சித்திரமூலம், கழச்சி சமூலம், மீட்டக் கொத்தான், திப்பிலி மூலம், பூண்டு, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு பலம்.க இடித்து சூரணம் செய்து விளக்கெண்ணை விட்டு பிசறி சாப்பிட தீரும்.

<u>குன்மத்திற்கு மருந்து :-</u>

வெள்ளைப் பூண்டு, நொச்சியிலை, நெல்லிவத்தல், இஞ்சி, முத்தின தேங்காய் வகைக்கு பலம்.க, கோஷ்டம், ஏலம், வெங்காரம், சிராம்பு, இந்துப்பு, சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, செருங்கொட்டை வகைக்கு பலம்.க இடித்துச் சூரணம் செய்து நெய்யில் பிசைந்து சாப்பிடத் தீரும்.

<u>விப்புருதியும், மேகமும், ரணங்களும் மூதன வகைகளும் தீர மருந்து :-</u>

முருங்கைப் பட்டை பலம்.க, ஈய செந்தூரம் பலம்.க கலந்து தேன் விட்டு பிசைந்து 24 நாள் சாப்பிடத் தீரும்.

சகல குன்மமும் சகல வாய்வும் தீர மருந்து :- பிரண்டை பலம்.உ, செந்தூரம் பலம்.க சூரணம் செய்து சாப்பிடத் தீரும்.

(இதுவும்) மேற்கண்டவையும், தாமரையைக் காய வைத்து இடித்து சிறு செங்கழுநீர் பூண்டும் வகைககு பலம்.க, செந்தூரம் பலம்.க கலந்து 20 நாள் சாப்பிட உஷ்ண ரோகம் தீரும்.

<u>வறட் கணத்துக்கு மருந்து :-</u> விளக்கெண்ணை படி.க, ஆவின் பால் படி.க, கீழா நெல்லிச் சாறு படி.1/8, அதிமதுரம், கடுக்காய், தானிக்காய், சுக்கு, விஷ்ணு காந்தி, துளசி, தூதுவளை, வகைக்கு பலம்.¼ இளநீர் விட்டு அரைத்து காய்ச்சி கரண்டி வீதம் கொடுக்கவும். முள்ளி வேரும், செவ்வள்ளிக் கொடி, தன்னி முட்டான் கிழங்கு, முசுமுசுக்கை, தூதுவளை, கண்டங்கத்திரி, கம்பிளி பிசின், கருஞ்சீரகம், நல்ல சீரகம், திருகு கள்ளி வேர், மணத்தக்காளி சாறு, வசம்பு வகைக்கு விராகனிடை.க

விளக்கெண்ணெய் படி.1/4 அரைத்து போட்டுக் காய்ச்சி சாப்பிடத் தீரும்.

மந்தார கணத்துக்கு:-

நாயுருவி, கரிசிலாங் கண்ணி, வல்லாரை, தும்பை, கண்டங்கத்திரி, நொச்சி இவைகளின் சாறு வகைக்கு படி.1/8 விளக்கெண்ணெய் படி.1/2, புண்கு திப்பிலி, மிளகு, சுக்கு, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய் வகைக்கு பலம்.1/2, கிராம்பு, வசம்பு வகைக்கு விராகனிடை.உ அரைத்து காய்ச்சிச் சாப்பிடத் தீரும்.

சூதக வாய்வு தீர் மருந்து:-

இஞ்சி பலம்.5, கண்டங்கத்திரி பலம்.க, துளசி தழை பலம்.க, சீதவளை பலம்.க, தூதுளை பலம்.க, நொச்சித் தழை பலம்.க, எருக்கம் பழுப்பு பலம்.க, கரிசிலாங்கண்ணி பலம்.க, சாட்டரணை பலம்.க, நிலாவாரை சமூலம் பலம்.க, புங்கம் வேர் பலம்.க, வாய்விளங்கம் பலம்.1/2, திப்பிலி மூலம் பலம்.1/2, ஆனைத் திப்பிலி பலம்.1/2, ஏலம் பலம்.1/2, ஓமம் பலம்.ரு, லவங்கப்பத்திரி பலம்.1/2, கருவப்பட்டை பலம்.1/2, தாளிச பத்திரி பலம்.1/2, கடுக்காய்த் தோல் பலம்.1/2, நெல்லி வற்றல் பலம்.1/2, தானிக்காய்த் தோல் பலம்.1/2, இடித்து சூரணம் செய்து நாட்டு சர்க்கரை படி.உ, எல்லாம் கலந்து சாப்பிட நோவுகள் தீரும்.

ஊது கரப்பானுக்கு மருந்து:-

அக்கத்தித் தளை, கற்பூர வல்லித் தளை, அவரித் தளை, வெள்ளறுகு சங்கந் தளை, மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், சிவதை, கடுகுரோகணி, கருஞ்சீரகம், சீரகம், ஆடாதோடை தளை, மணத்தக்காளி, ஆவாரம்பட்டை, சங்கங்குப்பி, பித்தளை, நிலக்கடம்பு, புண்ணுக்குப்பூடு, தளை, நொச்சித் தளை, கல்யாண முருக்கந் தளை, ஈர வெங்காயம், திரிபலை, திரிகடுகு, சரியிடை சூரணம் செய்து சாப்பிட 18 வகை கரப்பானும் தீரும்.

சூசிக வாய்வுக்கு, சூதக வாய்வுக்கு மருந்து:-

புங்கம் பட்டை பலம்.உ, சங்கம் பட்டை பலம்.உ, ஆதண்டை பட்டை பலம்.உ, மை போல் அரைத்து ஈர வெங்காயம் படி.1/4, கடுகுரோகணி பலம்.1/4, முடக்கொத்தான் தழை பலம்.1/2 இடித்து சூரணம் செய்து விளக்கெண்ணெயில் சாப்பிட நல்லது ஆகும். நோவுகள் தீரும்.

மேகத்திலே காணலும் வாய் புண் ரணங்கள், வெள்ளை விழுகிறது, தேகத்தில் புள்ளி, புள்ளியாக விழுகிறது தடிப்பு, சிரங்கு, சூலை கட்டுக்கு நிவர்த்தி:-

விளக்கெண்ணெய் படி.க, சங்கந்தழைச் சாறு படி.க, கொடிக் கள்ளி வாட்டிப் பிழிந்த சாறு படி.க, வெங்காயச் சாறு படி.க, ஒன்றாக்க் கலந்து அதில் கருஞ்சீரகம் விராகனிடை கஸ்தூரி மஞ்சள் விராகனிடை.5 சேர்த்துக் காய்ச்சி வடித்து 1/6 படி வீதம் 12 நாள் சாப்பிடவும். உப்பு, புளி நீக்கி பத்தியமாக இருக்கவும் தீரும். இந்தப்படி மூன்று முறை சாப்பிடவும்.

பிரமியம், வெட்டை, மேகத்தால் காணும் தடிப்பு, ரணங்கள், சிரங்கு, யோனிப் புத்து தீர மருந்து:-

உருத்த பறங்கிப் பட்டை பலம்.10, சுக்கு, மிளகு, திப்பிலி, சித்திர மூலம், ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி, சங்கங்குப்பி வேர் வகைக்கு பலம்.1/2, ஆவின் பால் படி.உ, நாட்டு சர்க்கரை வீசை.க, கரைத்து பாகு செய்து அதில் சூரணத்தை போட்டுக் காய்ச்சி பாகு செய்து லேகியமாகக் கிளறி சாப்பிடத் தீரும்.

இதுவும்:- ஆவின் நெய் படி.க, ஒரு செருங் கொட்டையை மூக்கு வெட்டிப் போட்டு காய்ச்சி அதில் கோதும்பை மாவு படி.1/2, பறங்கிப் பட்டை பலம்.5, சாட்டரணை வேர் பலம்.க, அமுக்குராங்கு பலம்.க, சித்திரமூலம் பலம்.க, சர்க்கரை படி.உ, சூரணம் செய்து லேகியம் கிளறி சாப்பிடவும்.

மேக கரப்பான் வெளுப்பு தடிப்பு, ரணம், கையில் ஊறல், சிரங்கு யோனிப் புற்று தீரும். நன்மை யுண்டாகும்.

__மருந்து:-__

பறங்கிப்பட்டை பலம்.3, சித்திரமூலம் பலம்.½, சுக்கு பலம்.½, மிளகு பலம் ½, திப்பிலி பலம்.½, சங்கம் வேர் பலம்.½, அமுக்கிரா வேர்.½, சீரகம் பலம்.½, ஏலம் பலம்.½, இடித்து சூரணம் செய்து சீனி சர்க்கரை வீசை.½, பாகு செய்து சூரணத்தை போட்டு லேகியம் கிளறி சாப்பிடத் தீரும்.

வேம்பு, விளா உப்பிலியங் கொடி, கரிசிலாங்கண்ணி, தேள் கொடுக்கு யிலை சங்கந் தழை, சுத்தம் செய்த, வெங்கலப் பொடி, இந்துப்பு, திப்பிலி, எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து கயறு செய்து வெண்ணெயில் உரைத்து கண்ணினுக்குப் போடவும். கண் சிகப்பு, படலம், புளிச்சக் கண் பிரிதல் புகைச்சல், நீர் வடிதல் தீரும்.

வேம்பு, புளி, வறப்புலாம், முருக்கு தேள் கொடுக்கு, கரிசிலாங்கண்ணி, வெள்ளை சாட்டரணை, சங்கு தழை இவைகள் சாறு சரியிடை எடுத்து சுத்தம் அஞ்சனக் கல் புளியம் பூவு கடுக்காய், அதிமதுரம், இந்துப்பு, இரும்பு பொடி, சரியிடையாக அரைத்து வெண்ணெ கூட்டி பண்ணுக்கு போட அழி கண், கண் ரெப்பைப் பிடிப்புகள் நீர் வடிதல், வெள்ளை, சிகப்பு தீரும்.

__கண் தெரியாதிருக்கிறதுக்கு நிவர்த்தி:-__ பீதரோகணி, மஞ்சிசிலை வகைக்கு ஒரு விராகனிடை துணி சுட்ட கால் விராகனிடை.உ, வெண்ணெயில் கூட்டிக் குழைத்து கண்ணில் போட்டு வரச் சகல கண் ரோகமும் தீரும்.

__கண்ணுக்கு சகல ரோகங்களுக்கும்:-__

சிறுகீரைச் சாறு மேற்கண்ட தழை, பொன்னாங்கண்ணி, வேலிப் பருத்தி, கரிசிலாங்கண்ணி, கிழவன் தாடி, பூண்டு, மின்னைத் தழை, முடக்கடித் தழை, பாப்ப மடாம் தழை, துளசி, நாவளை, புளியாரை விஷ்ணு காந்தி, இவைகள் கொஞ்சம், கொஞ்சம் அருகு சுத்தம் சரியிடையாக அரைத்து கயறு செய்து வெண்ணெயிலரைத்து கண்ணில் போடவும்.

சங்கம் வேர் கசாயத்தில் மேக சொரி தீரும். விஷ கரப்பானும் தீரும். நிலாவாரைக் கசாயத்தில் வலி குன்மம் தீரும்.

மேற்கண்டவையும், கடுக்காய், பூவரசம் பட்டை இந்தக் கசாயத்தில் ஊதுகாமாலை தீரும்.

ஊசிப் பொரும்பிச் சாற்றில் செய்யான் கடி தீரும். படர் தாமரை தீரும்.

சாதிலிங்கம் பலம்.க, ரசகற்பூரம பலம்.½, வெங்காரம் பலம்.½, தோல் முளை நீக்கின வாளம் பலம்.2, கொட்டை முத்துப் பருப்பு பலம்.க, இவைகள் அரைத்து செம்பு சிமிளில் வைத்துக் கொண்டு சித்திர மூலக் கசாயத்தில் சாப்பிட மூலை முடக்குத் தீரும்.

சித்திரமூலம், குப்பை மேனி, நத்தைச் சூரி இந்த மூன்றும் வேக வைத்து சாறு வகைக்கு படி.1/8க்கு எடுத்து நல்லெண்ணெ படி.½யில் காய்ச்சி---கிரந்தி நோவு போகும்.

வேலிப் பருத்தி கசாயத்தில் திமிர் வாதம் தீரும்.

ஏலம், அதிமதுரம், மல்லி, தக்கோலம், அரத்தை, கோஷ்டம் இவைகளின் கசாயத்தில் தொந்த சுரம் தீரும்.

__குன்மம் ஊதுக வாய்வு தீர மருந்து:-__

பனைவெல்லம் வீசை.க, பாகு செய்து அதில் சரக்கு அமுக்குலாங் கிழங்கு, சித்திரமூலம், தும்பைத் தழை, பிரண்டை, நொச்சி, மாவிலிங்கு, மிளகரணை, தொழிஞ்சி வேர், சாட்டரணை வேர், சங்கம் வேர், மாவிலிங்கம் வேர், சிறுபூளைத் தளை வேர், நிலாவாரைத் தளை வகைக்கு பலம்.க, வால் மிளகு, கடுக்காய்,

தானிக்காய், திப்பிலி, ஓமம், அரத்தை, காயம், தெசாவரம், சதகுப்பை, குரசானி, ஓமம், திப்பிலிமூலம், சாதிக்காய், கிராம்பு, தாளிச பத்திரி, சிறுநாகப்பூ, அதிவிடையம், திப்பிலி, சடாமஞ்சி, சேங்கொட்டை, ரசகற்பூரம், பண்டு பலம்.க, முங்கிலிலை வகைக்கு பலம்.½ முத்தின தேங்காய்.உ போட்டு இடித்துச் சாப்பிடத் தீரும்.

வன்மம் அக்கினி மந்தம் நிவர்த்தி:-

சித்திரமூலம், திப்பிலி, மூலம், ஓமம், திப்பிலி, மிளகு, சீரகம், முடிட்டத்தளை மேற்கண்ட வேர், பெருங்காயம் சடாமஞ்சி, இந்துப்பு வகைக்கு பலம்.க, போட்டு இடித்து சூரணம் செய்து திரிகடி பிரமாணம் சாப்பிட வன்மம், அக்கினி மந்தம் தீரும் மறுபடி ஈரக் குலை வலியும் இஞ்சி சாறும் விட்டு அரைத்து சாப்பிடத் தீரும்.

சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, திப்பிலி பலம்.க, கடுக்காய்.25, வெத்திலை 50, கருஞ்சீரகம் எலுமிச்சங்காய்.20, சிவதை பலம்.ந, கடுகுரோகணி ஓமம் பலம்.க, சீரகம், ஏலம், இந்துப்பு, கரியுப்பு, சவுட்டுப்பு, வெங்காரம் படிக்காரம் சாட்டறணைக் கிழங்கு (முடிவு இல்லை). (Incomplete)

மிதிபாகல் தயிலம்:-

தலைவலி, மண்டை யிடி, காச க்ஷயம் இவைகள் வறமேக வாய்வு தீரும். குருவித் தலைப்ப் பாகல் காய்ச்சாறு, ஆதண்டைச் சாறு, கருநொச்சிச் சாறு, நல்ல நொசசிச் சாறு, எருக்கம் பழுப்புச் சாறு, துளசிச் சாறு சரியிடையாக பிழிந்து வகைக்கு வீசம்படி நல்லெண்ணை படி.½, சதகுப்பை, ஓமம், வசம்பு, கருஞ்சீரகம், நல்லசீரகம், மிளகு, சுக்கு, அபினி, அதிமதுரம், அதிவிடையம், வேளைத் தழைச் சாறு, வேலிப் பருத்திச் சாறு, தேவதாரம், சரியிடை அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகவும் தீரும்.

கை கால் பிடிப்பு, திமிர் வாய்வு, அழவுப்பு, மூலச் சூடு, அண்ட வாதம், நடுக்கு வறதல்? சன்னி வியாதிகளும் தீர மருந்து:-

பறங்கிப் பட்டை, ஆடாதோடை, பிரப்பங் கிழங்கு, அதிவிடையம், [illegible], சித்திரமூலம், அதிமதுரம், லவங்கப்பத்திரி, கிராம்பு, கருஞ்சீரகம் சமனிடை நிறுத்துப் போட்டு இடித்து சூரணம் செய்து சாப்பிட வியாதிகள் தீரும்.

(வேறு) ரசம், கெந்தகம், செந்தூரம் வகைக்கு பலம்.க, தோனி உரலில் இடித்து தேத்தாங் கொட்டை லேகியத்துடன் சேர்த்து சாப்பிட தேகம் கல் போலாகும். மயிர் வெளுக்காது. கறத் தொட்டி தயிலம் முழுகி வர மேகம்.யக, சகல ப்ளிசம், கபால குத்து, இடி க்ஷயம், இருமல், ஈளை, மேகம், காங்கி தீரும்.

மருந்து:- நிலக் கடம்பை, முசுமுசுக்கை, கரிசிலாங்கண்ணி, அவரித் தளை, நிலக் கொழிஞ்சி, வெத்திலை, கருநொச்சி, நல்ல நொச்சி, காஞ்சிரந் தளை, கரூமத்தம், கஞ்சத்தளை இவைகளின் சாறு எருக்கம் பழுப்புச் சாறு இஞ்சிச் சாறு வகைக்கு சாறு படி.1/8, இவைகளைக் கலந்து நல்லெணை படி.க காய்ச்சி சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், அக்லாக்காரம், கருஞ்சீரகம், ஓமம், குரோசானி, ஓமம், பால் சாம் பிராணி, பூலாங்கிழங்கு வகைக்கு விராகனிடை.உ அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகி வந்தால் தீரும்.

கரிசிலாங் கன்னித் தயிலம்:-

கண்ணோய் தலை நோய், செவிநோய், பித்தம், உஷ்ணம், ப்ளிசம் தீரும். கரிசிலாங் கண்ணிச் சாறு படி.க, நல்லெண்ணை படி.க, கத்தாளை சாறு படி.½, கஸ்தூரி மஞ்சள் பலம்.க, சாதிக்காய் பலம்.க, ஆவின் பாலிலரைத்து போட்டுக் காய்ச்சி முழுகத் தீரும்.

சுரைத் தயிலம் பழைய சுரத்துக்கு:- பழைய காச்சல் காந்தல் வெப்புக் காந்தல் பல காச்சலும் தீரும்.

அமுக்குலாங் கிழங்கு, அரத்தை, சதகுப்பை, கோஷ்டம், மரமஞ்சள், கொம்

பரக்கு, திரிகடுகு, திரிபலாதி, அதிமதுரம், சதகுப்பை, கோரைக்கிழங்கு, கடுகுரோகணி வகைக்கு விராகனிடை.உ நல்லெண்ணெ படி.க, அரைத்துப் போட்டுக் காய்ச்சி மெழுகத் தீரும்.

தாம்பிரத் தயிலம்:-

நச்சு வலி, தேகவலி, பிடிப்பு எல்லாம் தீரும். எலுமிச்சம் பழச் சாறு படி.1½, நல்லெண்ணெ படி.க, கற்பூர வல்லித் தழை சாறு படி.க, சிலாசித்து கல்நார், அதிமதுரம், அக்கலாக்காரம், லவங்கப் பத்திரி, கோஷ்டம், வாய் விளங்கம், சாதிக்காய், பட்டை கருஞ்சீரகம், சீரகம், கோரோசனை, பலாங்கிழங்கு மரமஞ்சள் வகைக்கு பலம்.¼ அரைத்துப் போட்டுக் காய்ச்சி மெழுகத் தீரும.

தாபத்துக்கு மருந்து:-

அதிமதுரம், ஏலம், பர்படாகம், சீந்திக் கொடி, அறுகம் வேரு, சந்தனம், வில்வப் பழம், விலாமிச்சம், வேப்பீர்க்கு சமனாக சூரணம் செய்து வெந்நீரில் குடிக்கத் தீரும்.

உண்ணாக்கு வளர்ந்ததற்கு:-

நவச்சாரம், கல்கண்டு, எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து உள் நாக்கில் தடவத் தீரும்.

சுக்குவாக்கு:- நீ துவளைச் சாறும் ஆவின் நெய்யும் கோஷ்டம் விராகனிடை.க, அரைத்து சாப்பிடத் தீரும்.

வக்கம் கண்டத்துக்கு:-

வசம்பு, உள்ளி, சமம், அதிமதுரம், கோஷ்டம், சிராம்பு, சுக்கு, மிளகு, ஏலம், குறும்பை வேர், கருகரோகணி வகைக்கு விராகனிடை.உ சூரணம் செய்து விளக் கெண்ணெயில் போட்டு சூரிய புடம் வைத்து கரண்டி வீதம் சாப்பிட தீரும்.

பொருமல் வயிறுடைப்பு கனக்கைக்கு நிவர்த்தி:-

துளசி, கண்டங்கத்திரி, தும்பை கஞ்சாங்கோரை, தைவேளை இவைகளின் இலை சீரகம் சரியிடையாய் வெசப்பிச் சாறு பிழிந்து சாப்பிடத் தீரும். சாட்டரணை வேரு தெசாவரம் சரியிடை ஆக கசாயம் செய்து சாப்பிடத் தீரும்.

மயக்கம் சோகம் நாவரட்சிக்கு குடிநீர்:-

கோஷ்டம், சீரகம், ஏலம், விலாமிச்சம் வேர், வில்வவேர், அதிமதுரம், ஆமைஓடு, சந்தனம், மான் கொம்பு, வறப்பூலாம் வேர், நெல்பொரி சரியிடை சூரணம் செய்து தண்ணீரில் போட்டுச் சாப்பிடத் தீரும்.

ரெத்தக் கடுப்பு அடி தள்ளினதற்கு மருந்து:-

ஆவின் பால் படி.½, வெந்தயம் படி.¼, பனைவெல்லம் அச்சு.க, காச்சி லேகியம் செய்து சாப்பிட நல்லது ஆகும்.

இதுவும்:- கசப்பு நார்த்தங்காய் வேர் பலம்.க, பொன்னாங்கண்ணி சமூலம் பலம் க, சாட்டரணை வேர் பலம்.க, பொடுதலைச் சாறு விட்டு அரைத்து கொட்டாகா பிரமாணம் உருண்டை செய்து சாப்பிடத் தீரும்.

கணை இருமல் வாய் நாற்றம் தீர மருந்து:-

மணத்தக்காளி ஒரு பிடி, வெந்தயம் பலம்.க, ஈரவெங்காயம் மூன்று, ஏலம் துட்டிடை பொன்னிறமாக வறுத்துச் சூரணம் செய்து சுடு தண்ணீரில் ஒரு நாளிகை சென்றெடுத்து 4 நாள் சாப்பிடத் தீரும்.

கனம், மாந்தம், பொருமல், இருமல் கபக்கட்டுக்கு மருந்து:-

தூதுவளை, காளி மரத்து அள் கரிசிலாங் கண்ணி தழை, வல்லாரை தழை, தும்பைத் தழை, நொச்சித் தழை, கண்டங்கத்திரி வகைக்கு சாறு படி.½, விளக்கெண்ணெ

படி.க, கடுக்காய், தாளிக்காய், நெல்லிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளைப் பூண்டு வசம்பு வகைக்கு விராகனிடை.3 அரைத்துப் போட்டுக் காய்ச்சி சாப்பிடத் தீரும்.

<u>வளமாந்தம் போர் மாந்தம் இவைகளுக்கு மருந்து</u>:-

வசம்பு, ஓமம், பூண்டு, காயம் வகைக்கு பலம்.½ ஆள் செய்து வேப்பெண்ணெயில் போட்டு கொதிக்க வைத்து சாப்பிட நல்லது நோவு தீரும். வேப்பெண்ணெய் படி.½, வேலிப்பருத்தி சாறு, குப்பை மேனிச்சாறு, வெள்ளெருக்கம் பழுப்பு சாறு இவைகள் வகைக்கு படி.1/8, வெள்ளறுகு பலம்.½, நொச்சித் தழை பலம்.½, முருங்கை பட்டை பலம்.½, வெள்ளைப் பூண்டு பலம்.½, வசம்பு பலம்.¼, சித்தரத்தை பலம்.¼, ஒன்றாக்க் கலந்து காய்ச்சிச் சாப்பிடத் தீரும்.

<u>வயிறு உளைவுக்கு பொருமலுக்கு பால சஞ்சீவி மாத்திரை</u>:-

மூலைப் பாலில் சாப்பிடத் தீரும். துருசு வெங்காரம், கோரோசனை, கொழுஞ்சித் தழை கடுகுரோகணி வகைக்கு சரியிடையாக அகத்தி தழைச் சாறு விட்டு அரைத்து சிறு உருண்டை செய்து வெந்நீரில் ஊற்றினால் உடனே தீரும்.

நல்லெண்ணெய் படி.¼, தேங்கா எண்ணெய் படி.¼, புங்கம் பால் படி.¼, ஒதியம் பால் படி.¼, ரசம், கெந்தகம், துரிசு, துத்தம், குங்கிலியம், நிலக் கொழிஞ்சி, சாறு காசுக்கட்டி, பச்சைக் கற்பூரம், பூண்டு, வசம்பு, மஞ்சள், வகைக்கு சரியிடை மை போல் அரைத்துக் காய்ச்சிப் போட ஆறுத புண், மூருகு பிளவை அரையாப்பு, கிரந்தி படர்கிற பறங்கிப் புண், மூலைப் புண், பவுத்திரப் புண், எலிகடி புண், புரைடத்து உண்டாகிற புண்களுக்கெல்லாம் தீரும். சகலமும் ஆறும்.

கால், கை தலை இவைகளில் வரும் புண் கடுவாய் புண்ணுகள் என்று பெயர்.

<u>இதற்கு மருந்து</u>:-

சங்கம் இலையை வறுத்து அரைத்து வெண்ணெயில் குழைத்து தடவத் தீரும். ஆறும்.

<u>கபால கரப்பானுக்கு தயிலம்</u>:-

கோரைக்கிழங்கு, ஆவரை, பொன்னாங்கண்ணி, கரிசிலாங்கண்ணி, சீறுசெங்கழுனி பண்டு, ஒரிலைத் தாமரை, சிவனார் வேம்பு, நிலவேம்பு, குப்பை மேனித் தழை, சங்கந் தழை, மலைதாங்கி வேர், கொன்னை வேர், வகைக்கு பலம் க, சுக்கு, மிளகு, திப்பிலி கடுக்காய், இந்துப்பு, கருஞ்சீரகம், வசம்பு, பண்டு அழுக்லாம்பழம், கடுகுரோகணி, விலாமிச்சம் தென்னமரப்பிசின், அதிமதுரம் வகைக்கு பலம்.உ, பாலில் அரைத்து நல்லெண்ணெய் படி.க, போட்டுக் காய்ச்சி முழுகவும் தீரும்.

இரவும்:- தண்ணீர்முட்டங்கிழங்கு சாறு படி.க, சேர்த்து கத்தாழை சாறு படி.க, ஆவரை பலம்.4, சாறு படி.¼, நல்லெண்ணெய் படி,க, சித்திரமூலம் வெம்பாடம் பட்டை, கருஞ்சீரகம் வகைக்கு பலம்.½, அரைத்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி சாப்பிட்டு தலை முழுகவும் தீரும்.

<u>சிரங்கு சொறிகள் ஆறுத புண்ணுக்கு</u>:- செருங்கொட்டை.5, நல்லெண்ணெய் படி.1/8, காய்ச்சிப் பூசவும் தீரும். மரமஞ்சள், உப்பு, மிளகு, கருஞ்சீரகம் வகைக்கு பலம்.¼, மை போலரைத்து தேங்கா யெண்ணெயில் போட்டுக் காய்ச்சிப் பூசவும் தீரும்.

<u>பூடை கரப்பான், கொள்ளிக் கரப்பான், வீங்கு கரப்பான், அரிகரப்பான், செங்கரப்பா இந்த ஐந்து வித நோய்களுக்கு தீர மருந்து</u>:-

செங்கத்தாரிப் பட்டை, நொச்சிப் பட்டை, முடக் கொத்தான் வேர் மேற்கண்ட தழை கழற்சிக் காய், புங்கம் பட்டை, சங்கங் குப்பி, அழுக்லாந் தழை, சிறுசெருப்பனை, ஆசி பொரும்பித் தழை, கிழவன் தாடிப் பண்டு வேலிப் பருத்தி, தழை, சித்திரமூலம், வெள்ளறுகு சமூலம் (~~முடிவு இல்லை~~) Incomplete

ஆருத புண்ணுக்கு:-

ஊத்தியிலையும், கற்பூரமும் சரியிடை அரைத்து விளக்கெண்ணெயில் குழைத்து பூசத் தீரும்.

ரணங்களுக்கு ஆருத புண்களுக்கு:- அஞ்சனக் கல், நிமிளை, காந்தம், ரசம், அரிதாரம் முருதார் சிங்கு, இங்கிலியம், வசம்பு, இவை சரியிடை அரைத்து புங்கம் பட்டை சாறு ஓதியம் பட்டைச் சாறு, குமிழஞ் சாறு, நல்லெண்ணெயில் காய்ச்சி போட்டு வந்தால் மூலகு பிளவை, கன்னப் புத்து, யோனிப்புத்து, கொடிப்பவுத்திரம், வெடி சூலை, புடைசூலை முழாமுளை ஆருத புண்ணும் ஆறும்.

கெற்பந் தரிக்க மருந்து:-

வேம்பு, விழும்பி, நிலாவாரை, கள்ளி பொன்னவாரை, வேளைத்தளை, ஈரவெங்காயம், பூவரசு, வாகை சங்கு, வெள்ளறுகு, ஆவின் சாணி விளக்கெண்ணை படி.க சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், வல்லாரை, தண்ணி முட்டான் கிழங்கு, சித்திரமூலம், வால்மிளகு, கோரோசனை, இந்துப்பு, கிராம்பு, கருஞ்சீரகம், மரமஞ்சள், மஞ்சள், நேர்வாளம், வெங்காரம், அரத்தை, கார்போ கரிசி, கோஷ்பிந்து, கெந்தகம், சாதிலிங்கம், பிரப்பங் கிழங்கு, பறங்கிப்பட்டை வகைக்கு விராகனிடை. 1½ மேற்கண்ட சாத்தாலரைத்து பதமாகக் காய்ச்சி வளித்தது முதல் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வர கெற்பரோகம் தீரும். உப்பு, புளி தள்ளவும்.

கெற்ப ரோக நிவர்த்தி:-

கண்டங்கத்திரிப் பழச் சாறு படி. ½, சுக்கு, மிளகு, திப்பிலி, தெசாவரம் வகைக்கு பலம். ½, சீமம் பலம்.க, இவை பலம்.க, பெருங்காயம், கடுகுரோகணி, இந்துப்பு பெட்டியுப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, வகைக்கு பாயிடை.க மேற்கண்ட சாத்தாலரைத்து கலந்து கொதிக்க வைத்து குழம்பி வரும் சமயத்தில் ஐந்து பலம் கருப்புட்டி நல்லெண்ணை படி. ¼ விட்டு லேகியம் செய்து கொட்டக்கா பிரமாணம் சாப்பிடவும். கல்சூலை, கெற்பசூலை, ரத்த கபம், ஊதக வாய்வு முதலான ரோகங்கள் தீரும்.

சூரணம்:- சத்தி விக்கல் அரோசியம், நெஞ்செரிவு, கைகால் எரிவு, தேகம் படபடப்பு, அக்கினி வெட்டை, வாதம், பித்தம் பாண்டு தீரும்.

ஏலம், அதிமதுரம், தாமரைக் கிழங்கு, நிலவேம்பு, கோரைக்கிழங்கு, வில்வவேர், கோஷ்டம், சந்தனம், வாய்விளங்கம், சடாமஞ்சி, தண்ணிமுட்டான் கிழங்கு, அமுக்கிராம் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, ஏலரிசி, நன்னாரி வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, தாளிசபத்திரி, நெய்தல் கிழங்கு, கருஞ்சீரகம், நல்ல சீரகம், சாதிக்காய், நெல்லிவத்தல், தக்கோலம், காட்டு சீரகம் இவைகள் வகைக்கு பலம்.க, கோரோசனை பலம். ½, குங்குமப்பூ பலம். ½, பச்சைக் கற்பூரம் பலம். 1/8, நாட்டுக் கற்பூரம் பலம். 1/8, இவைகள் சூரணம் செய்து இதற்கு நிகர் சீனி கலந்து திரிகடி பிரமாணம் சாப்பிட நன்மை உண்டாகும்.

மேகராசாங்க சூரணம்:-

கை கால் எரிவு, எலும்புருக்கி, நீர் தாரை வலி மோர் போல இறங்குதல். பிரமியம் நீர், சுருக்கு, கல்லடைப்பு, தேக வறட்சி, உள்சுரம், க்ஷயம் தீரும்.

வெட்டிவேர், சீரகம் பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, கோஷ்டம், நெல்லிவத்தல், நிலப்பனைக்கிழங்கு, காக்காய்ப் பொன் முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், குங்குமப்பூவு, கோரோசனம், சிறுநாகப்பூ, தாமரை, பச்சைக் கற்பூரம், சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், நெல்லுப் பொரி, அமுக்குலாம் கிழங்கு, கடுக்காய், தக்கோலம், இலவங்கப்பட்டை வகைக்கு பலம். ½ சூரணம் செய்து சரியிடை சீனி கலந்து சாப்பிடத் தீரும்.

<u>கண்வலி, சிகப்பு கருப்பு நீர் வடிதலுக்கு மருந்து:-</u>

தானிக்காய், கடுக்காய், மாசக்காய், காசுக்கட்டி வகைக்கு விராகனிடை.க, அபினி பொரிச்ச வெங்காரம், படிக்காரம் வகைக்கு விராகனிடை.½, வறப்பூலாந் தளை ஒரு பிடி, கருவேலந் தளை, ஒரு பிடி, இடித்துச் சாறு பிழிந்து கொதிக்க வைத்து போடவும் தீரும். புளியை கரைத்து நாள் ஒன்றுக்கு 4 தரம் பிழிந்து வரவும். மேற்கண்ட நொச்சித் தளைச் சாறு புன்னைக்கு பூண்டு சாறு, புளியந் தளைச் சாறு சரியிடையாக சீலையில் முடிந்து கண்ணுக்கு ஒத்தடம் செய்யவும். ஆவாரம் பூவை அரைத்து கண்ணை சுத்திப் போடவும்.

இரும்புத் தகடு நெருப்பில் வைத்து அதின் மேல் <u>கரியா கூழம்</u> வைத்து கடுக்காய் தூளும் போட்டு புளியிலைச் சாறு விட்டு கண்ணை சுத்திப் போடத் தீரும். வேலாந்தளை ஒரிலைத்தாமரைத் தளை பொன்னாங்கண்ணி, சிறுகீரை இவைகளை இடித்துச் சாறு பிழிந்து திருமஞ்சனப் பொடி, மிளகு, கஸ்தூரி மஞ்சள், சரியிடை அரைத்து தலைக்கு பூசவும் தீரும்.

<u>கண்ணுக்கு:-</u>

குங்கிலியம், அரிசி, அபினி சமனாக அரைத்து ஊமத்தஞ் சாறு விட்டு அரைத்துக் காய்ச்சி கண்ணை சுத்திப் போடவும். ~~கண்~~

கண்ணுக்கு களிம்பு:- நிலக்கடம்பைத் தளை, சிறுகீரை, தேள் கொடுக்கியிலை, பூலாந் தளை, மிளகு இவைகளை சமனாக அரைத்து எலுமிச்சங்காய் பிரமாணம் பாலிலரைத்து தலைக்கு தேய்க்கவும் தீரும்.

கோழிமுட்டை வெள்ளைக் கருவு படிக்காரம், சிறுகீரை வேர் சரியிடை கடைய வெண்ணையாகும். கண்ணுக்கு போட்டு வரவும்.

வேலாங் கொழுந்து, மாதுளங் கொழுந்து சரியிடை பால் விட்டு அரைத்து பிழிந்து காய்ச்சி கண்ணுக்கு சுத்தி போடவும். படிகாரம், துத்தம், துருசு சரியிடை, எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்துக் காய்ச்சி கண்ணைச் சுத்திப் போடவும் தீரும்.

ஆமணக்கு வேர், கடுக்காய்த் தோல் இடித்து தண்ணீரில் ஊறப் போட்டுக் காச்சி கண்ணுக்குப் போடவும்.

முருங்கையிலை பிடி.க, அதிமதுரம் விராகனிடை.க, மரமஞ்சள் விராகனிடை.க, தட்டி பாலிலரைத்து நெய்யில் வேக வைத்து கண்ணுக்கு விடவும்.

பொன்னாங்காணி, சந்தனம், அதிமதுரம் சரியிடை முலைப் பாலில் அரைத்துப் பூசவும். <u>கண்ணில் சதை வளர்ந்திருக்கிறதற்கு மருந்து:-</u>

ஈரவெங்காயம், குறிஞ்சாம் வேரு அரைத்துப் பிழியவும்.

<u>கண் ரோகங்களுக்கு மாத்திரை:-</u>

பச்சைக் கற்பூரம் விராகனிடை.1/8, இந்துப்பு விராகனிடை./8, ரசம் விராகனிடை.1/8, திப்பிலி விராகனிடை.½, மிளகு விராகனிடை.½, காரீயம் விராகனிடை.½ பூநாகம் விராகனிடை.உ, கடுக்காய் விராகனிடை.உ, அரிதாரம் விராகனிடை.உ, எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து கயமாக செய்து முலைப் பாலிலுரைத்து கண்ணுக்குப் போடவும்.

<u>அரி கரப்பான் மருந்து:-</u>

ஆலங் கீரை, கொட்டைக் கரந்தை, செருப்படை, கரிசிலாங் கண்ணி, பொன்னாங்கண்ணி, பேய்மிரட்டி, நரிமிரட்டி, சிறுகீரை, வட்டத் திருப்பி, கிழவன் தாடி, ஆடாதோடை, செங்காஞ் சொறி இவைகளின் வேரு நிலக்கொழுஞ்சி, கோடக சாலை மிளகறணை, வேலிப்பருத்தி, கீழச் செடி, உப்பு பசலி, வசம்பு இவைகளின் வேர்ப் பட்டை வகைக்கு பலம்.½, அரைத்து விளக்கெண்ணை படி.½ காய்ச்சிக் கொடுத்தால் அரிசிரந்தி, புண் சொறிகள், கரப்பான், பண் மேகப் புண் இப்படி 18-ம் தீரும்.

~~ஊது ஓலை~~

சூலை, சூடு கரப்பான் இவைகளுக்கு மருந்து:- 23.9.63,

அகத்தி, கற்பூர வல்லி, அவுரி, வெள்ளறுகு, சங்கு, ஆடாதோடை, மணத்தக்காளி, ஆவாரை, சங்கங்குப்பி, நிலக் கடம்பை, அமுக்குலாம் நொச்சி, கல்யாண முருக்கு, ஈர வெங்காயம் வகைக்கு சாறு படி.1/8, விளக்கெண்ணை படி.½ மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள்,, சிவதை, கடுகுரோகணி, கருஞ்சீரகம், நற்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, தானிக்காய், கடுக்காய், நெல்லிக்காய், வகைக்கு விராகனிடை.க இரைத்து விளக்கெண்ணையில் போட்டுக் காய்ச்சி 18-வகை புண்ணுக்கும் கரப்பானுக்கும் போடத் தீரும்.

இந்த பதிவெட்டு வகை புண்களுக்கும் இதுவும் ஆதரவாகச் செய்யவும்:-

எருக்கு, மருக்காரை, வட்டக் கிலுகிலுப்பை, வேலிப்பருத்தி இவைகளின் வேர்ப் பட்டை, கடுக்காய், பூண்டு வகைக்கு பலம்.¼, நல்லெண்ணையில் போட்டுக் காய்ச்சி மூன்று நாள் புண்ணின் பேரில் தடவ ஆறும்.

சகல கரப்பான் மருந்து:-

புங்கம் வேர் சங்கம் வேர் ஆதண்டை வேர் இவைகளை அரைத்து ஒரு எலுமிச்சங்காய் பிரமாணம் ஈர வெங்காயம் படி.1/8, கடுகுரோகணி பலம்.¼, முடக் கொத்தான் பலம்.½ இவைகளை அரைத்துப் போட்டு விளக்கெண்ணை படி.1/8-ல் போட்டுசூரிய புடம் வைத்துச் சாப்பிட முடக்கு சூலை, புண், கரப்பான் தீரும்.

கருங் கரப்பான் நிவர்த்தி மருந்து:-

மிளகு, துளசி, கடுக்காய், கோஷ்டம், கருஞ்சீரகம், திப்பிலி, ஓமம், கஞ்சங் கோரை, நத்தைச் சூரி, சிறு அவரை, பெரிய அவரை, சிவனார் வேம்பு, ே வேலிப்பருத்தி, இவைகளின் வேர் சரியிடை தட்டி விளக்கெண்ணையில் போட்டு பதமாய்க் காய்ச்சி சாப்பிட்டு புண்ணுகளுக்குப் பூசவும் தீரும். 18-வகை புண்ணுகளும் தீரும். இச்சா பத்தியம்.
(வேறு) சிவதை வேர் பலம்.க, கருவேப்பிலை, கொத்தமல்லி, இந்துப்பு, தேசா வரம், செவியம், மூத்தக் காசு, சுக்கு, மிளகு, திப்பிலி, கருஞ்சீரகம், நற்சீரகம், சிறுநாகப்பூ, அன்னபேதி, விலாமிச்ச வகைக்கு விராகனிடை.1¼, லவங்கப் பத்திரி, தேசாவரம், சாதிபத்திரி, சந்தனம், வெங்காரம், கஸ்தூரி மஞ்சள், சடாமஞ்சி வாய்விளங்கம் வகைக்கு கழஞ்சு.1½ இடித்துச் சூரணம் செய்து சரியிடை சீனி கலந்து சாப்பிடவ அபான வாய்வு, நீர்க்கட்டு தீரும். தேனில் சாப்பிடவும்.

மூல வாய்வுக்கு:-

வெள்ளை பூண்டு பலம்.5 அரைத்து ½ படி ஆவின் பாலில் கலக்கி காய்ச்சி பிறை குத்தி உறைய வைத்து தயிர் எடுத்து அந்தத் தயிரை இரு பொழுது 3 நாள் அன்னத்தில் ஊத்தி சாப்பிட பொருமல் தீரும்.

மாணியில் நீர் அடைத்தால் ஊமத்தம் விரையை வெதுப்பி அதுக்கு நிகர் ஏலரிசி கூட்டி தண்ணீர் ஊத்தி அரைத்து கீழ் வயத்தில் பூச இறங்கும்.
(வேறு) மேற்கண்டவையும், திப்பிலி, கிராம்பு, இந்துப்பு, வெடியுப்பு, சுக்கு, மதுரம், அமுக்குலாம், ஏலம், தானிக்காய், செண்பகப்பூ, கோஷ்டம், காஞ்சிரம் வேர், அதிவிடையம், சந்தனம், நெல்லி வத்தல், கல்நார், ஓமம், லவங்கப் பத்திரி, விலாமிச்சம், சிவனார் வேம்பு, மிளகு, கடுக்காய் 10 சூரணம் செய்து தேனில் சாப்பிடத் தீரும்.

மூல பாண்டு மந்தானிக்கு நிவர்த்தி:-

ஓமம் பலம்.க, சுக்கு பலம்.க, சித்திரமூலம் பலம்.க, கடுக்காய் பலம்.3 இடித்துச் சூரணம் செய்து திரிகடி பிரமாணம் மோரில் சாப்பிட்டு வந்தால் தீரும்.

<u>பயித்திய வாய்வு, மூலவாய்வு, ஆனந்த வாய்வு, அக்கினி மந்தம் இவைகளுக்கு மருந்து:-</u>

சுக்கு, மிளகு, திப்பிலி, சித்திர மூலம், கோஷ்டம், திப்பிலி மூலம், நவச்சாரம் பெருங்காயம், இந்துப்பு, ஓமம், சீரகம், வாய் விளங்கம் வசம்பு, கறியுப்பு வகைக்கு பலம். ½ இதுக்கு சரியிடை கடுக்காய்த் தோள், திரிகடி பிரமாணம் சாப்பிடத் தீரும்.

விரை நீக்கி கடுக்காய்.20- ஒரு தலைப் பூண்டு 20, பெருங்காயம் விராகன். 3, முடக்கொத்தான் கொழுந்து ஒரு பிடி இதுகளை நல்லா பிசைந்து விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி கரண்டி வீதம் சாப்பிட சகல வாய்வும், மலக்கட்டும் தீரும்.

<u>மூலக் கிருமிக்கு மூல வாய்வுக்கு லேகியம்:-</u>

[கறிக] கருணைக் கிழங்கு, சே[புங்] கிழங்கு, புளியம் பிறண்டை கிழங்கு, பிறண்டை வகைக்கு பலம். க, திரிகடுகு, திரிபலை, குரோசாணி ஓமம், தாளிச பத்திரி, சிறு நாகப்பூ, கோரைக்கிழங்கு, கருஞ்சீரகம், மூசட்டை வேர், சித்திரமூலம், அமுக்குலாம் இதுகள் வகைக்குபலம். ½, சூரணம் செய்து பனைவெல்லம் ருண்டு. க, பாகு செய்து லேகியம் கிளறிச் சாப்பிடத் தீரும்.

கால் படி, விளக்கெண்ணெயில் ஈர. வெங்காயம் கால் படி. முடக்கொத்தான் தளை ஒரு பிடி, வெள்ளரி விரை கால் படி, சர்ட்டறணை வேர் ஒரு பிடி இதுகளை அரைத்துக் காய்ச்சி கரண்டி வீதம் சாப்பிட மலக்கட்டு நீர்க் கட்டு தீரும்.

<u>மூலம் தள்ளுகிறது, சாதம் செரியாதது, கிருமி பூச்சிகளுக்கு நிவர்த்தி:-</u>

100-கடுக்காய்த் தோள், சிவதை, சித்திரமூலம், மஞ்சள், சுக்கு, திப்பிலி, செங்கொட்டை, எள்ள, நிலாவாரை, கருணைக் கிழங்கு, பிறண்டை, கோவைக் கிழங்கு, சாட்டறணைக் கிழங்கு சரியிடை கூட்டி கடுகு பலம். உ, சூரணம் செய்து சர்க்கரை படி உ, வெள்ளாட்டுப் பால் விட்டுக கரைத்து லேகியம் செய்து சாப்பிட எல்லா நோவும் தீரும்.

<u>மூல வாய்வு, உடம்பு வேர்வை, உதிரரோகம், இசிப்பு, குன்மம், பயித்தியம் சன்னி வாய்வு, பசி மந்தத்திற்கு நிவர்த்தி:-</u>

திப்பிலி மூலம் பலம். 5, மிளகு பலம். 2½, திப்பிலி பலம். 2½, செவியம் பலம் க, சித்திரமூலம் பலம். க, வாய்விளங்கம் பலம். க, கருஞ்சீரகம் பலம். க, ஓமம் பலம் க, வெடியுப்பு பலம். க, சவுக்காரம் பலம். ½, மல்லி பலம். க, சதகுப்பை பலம். க, வெப்பாலை அரிசி பலம். க, அதிமதுரம் பலம். க, சாதிப் பத்திரி பலம். ½, கிராம்பு பலம். ½, தாளிச பத்திரி பலம். க, லவங்கப் பத்திரி பலம். க, இடித்து சூரணம் செய்து சரியிடை சீனி கலந்து சாப்பிடத் தீரும்.

<u>எச்சி தோஷம், நீர்புள்ளி தோஷம், எட்டும் கணமாந்தம், பறவை தோஷம், நச்சு சுரம், கழிச்சல், இருமல் இளை, காசம் தீர மருந்து:-</u>

கல்நார், கிராம்பு, லவங்கபத்திரி, செவியம், திபம், அதிவிடையம், தானிக் காய், கருஞ்சீரகம், அக்கலாக்காரம், கடுகுரோகணி, தானிக்காய், கருஞ்சீரகம், சாதிக்காய், சாதிபத்திரி, குருசாணி, ஓமம், கடுக்காய்ப் பூவு, கஸ்தூரி, ரசகற்பூரம், , சீரகம், கோரோசனை, குங்குமப்பூ இதுகளை ஒர் நிறையாய் இஞ்சிக் கரிசிலாங் கண்ணி சாத்திலரைத்து நாற்த்தம் காய் சாத்திலும் அரைத்து சிறு உருண்டை செய்து குழந்தைகளுக்கு கொடுத்திடல் தீரும்.

<u>அஷ்ட கணங்கள், மாந்த சுரம், தாகம் தீர மருந்து:-</u>

சாஸ்திர வேதி, கோஷ்டம், ஏலம், கிராம்பு, சந்தனம், கடுகுரோகணி, இலுப்பைப்பூ, நன்னாரி, விலாமிச்சம், வெட்டி வேர், திப்பிலி, அதிமதுரம், கோரைக் கிழங்கு, திராட்சி, பேரீச்சம் ஒர் நிறையாய் கரிசிலாங் கண்ணி சாத்திலரைத்து கடலை பிரமாணம் உருண்டை செய்து முலைப் பாலிலாவது வெந்நீரிலாவது கொடுக்கவும் தீரும்.

இதவும்:- சந்தனம், நன்னாரி, புளியம் விரைத் தோல், சாஸ்திர வேதி, முத்தக் காசு

சரிலைத் தாமரை, சிறுகீரை, நாயுருவி, வல்லாரை, சாதிக்காய்; சாதிபத்திரி, செண்பகப்பூ, கல்நார், திப்பிலி, இருவாட்சி, கருஞ்சீரகம், நற்சீரகம், ஏலம், பட்டை, உத்திராட்சம், கோரோசனை, பொன்னாங்காணி, குப்பை மேனி, மான் கொம்பு; சரியிடையாக அரைத்து தேத்தாம் விரைப் பிரமாணம் உருண்டை செய்து முலைப் பாலிலும் வெந்நீரிலும் கொடுக்கத் தீரும்.

எட்டு விதமான மாந்தங்களும் தீர மருந்து:-

விளக்கெண்ணை படி.க, வெள்ளாட்டுப் பால் படி.க, ஒன்றாய்க் கலந்து கிருவை பட்டை, கருவேலம் பட்டை, வெங்காயம் இண்டங் கொழுந்து வகைக்கு ஒரு பிடி, சீரகம் பலம்.க, காசுக்கட்டி பலம்.½ அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி கரண்டி வீதம் கொடுக்கத் தீரும். தோஷமும் தீரும்.

மாந்தத்திற்கு மருந்து:-

வல்லாரை பலம்.½, சுக்கு, ஏலம், கலைமான் கொம்பு, தாளிச பத்திரி, சாதிக்காய், கோஷ்டம், சாதிபத்திரி, விலாமிச்சம் வெட்டி வேர், சீரகம், தக்கோலம், முல்லி, கடுகுரோகணி வகைக்கு விராகனிடை.க ஆவின் பாலிலரைத்து ஆவின் நெய்யில் காய்ச்சி சாப்பிட மாந்தம் போம். மாந்தம், மேகம், காசம், விஷ நோய், ஈளை, இருமல், சுவாச காசம், இளைப்பு, மூலகணம், உள் காச்சல் தீரும்.

மாந்தங்களுக்கு:- இண்டு தூதுவளை, சங்கங் குப்பி, வேலிப்பருத்தி, , பூவரசு, குப்பைமேனி, ஆடாதோடை, சாட்டறணை, பூலாந்தலை, நரிப் பயத்தங் கொடி, தைவேளை, பொரும்பித்தளை, கத்தாழை இவைகளின் வேர் சாறு படி.க, விளக்கெண்ணை படி.க, கருஞ்சீரகம், ஓமம், பூண்டு, கோரோசனை, செண்பகப்பூ, வசம்பு, தாளிக்காய், சாதிக்காய் வகைக்கு பலம்.½ காய்ச்சி சாப்பிடத் தீரும்.

18-வகை கணங்களும் தீர மருந்து:-

ஏழு தரம் கழுவி கத்தாழை சோறு ஒரு தேங்காய் பிரமாணம் வெந்தயம் துட்டிடை, ஈர வெங்காயம் பலம்.க அரைத்துப் போட்டு விளக்கெண்ணையில் காய்ச்சி கரண்டி வீதம் சாப்பிடத் தீரும்.

கல் சூலைக்கு மருந்து:-

கண்டங்கத்திரி பழச் சாறு படி.¼, சுக்கு, திப்பிலி, தேசாவரம், மிளகு வகைக்கு பலம்.½, ஓமம் பலம்.க, பூண்டு பலம்.க, பெருங்காயம் பலம்.½, கடுகுரோகணி இந்துப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, கல்லுப்பை வகைக்கு தோலா.க அரைத்து கொதிக்க வைத்து கருப்புகட்டியும், நல்லெண்ணையும் விட்டு லேகியம் செய்து வீட்டுக்கு விலக்கமாயிருக்கும் போது 8 நாள் சாப்பிடவும். இச்சா பத்தியமாக சாப்பிடவும். கல் சூலை தீரும். கெற்ப சூலை, ரத்தக் கட்டி, சூதக வாய்வு முதலான கெற்ப் ரோகங்கள் தீரும்.

துருத புண்களுக்கு களிம்பு:-

துருசு, கெந்தகம், குங்கிலியம், சரியிடையாக அரைத்து விளக்கெண்ணையில் கரைத்து தடவத் தீரும்.

சிரங்குகளுக்கு: நிலக் கடம்பை யிலையும், வெள்ளைப் பாசாணமும், அரைத்து சூரிய புடம் வைத்து புண்ணுக்கு தடவ புண் ஆறும்.

கெற்ப சூலை ஆதலான சகல ரோகங்களும், வாய்வு, உதிர வாய்வும் தீர மருந்து:-

ஆகாச கெருடன் கிழங்கு, அப்புக் கோவைக் கிழங்கு, சிறட்டி வேர், முதக்காரை வேர், அறுகம் வேர், புளியம் பிறண்டைக் கிழங்கு, வகைக்கு பலம்.க, அரைத்து விளக்கெண்ணை படி.க, ஆவின் பால் படி.க, கடுக்காய், சிவதை, இந்துப்பு, வளையலுப்பு, பெட்டியுப்பு, கரியுப்பு, கல்லுப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம்,

பூண்டு சீரகம், வகைக்கு பலம்.வ இடித்து சூரணம் செய்து கண்டங் கத்திரிச் சாறு விட்டு அரைத்து பதமாக காய்ச்சி வீட்டுக்கு விலக்கமாயிருக்கும் போது 3 நாள் 6 வேளை புளி தள்ளி சாப்பிடத் தீரும். சிரங்குகளுக்கு நீரடி முத்தும், சந்தனமும் சரியிடை அரைத்து சிரங்குகளில் தடவ ஆறும்.

இதுவும்:- காட்டுச் சீரகம், கார்போகரிசி, கஸ்தூரி மஞ்சள், ஏலம், கடுக்காய், நீர்வடி, முத்து சமனிடையாய் அரைத்து அதற்கு சமன் மிளகு நன்றாய் அரைத்து கலந்து, ஊமத்தம் காயில் விரை எடுத்து அதில் அடைத்து சாணியில் புதைத்து சுட்டு அரைத்து தேங்காய் எண்ணெயில் பூசத் தீரும்.

<u>சகல புண்ணுக்கும் கரப்பானுக்கும் எண்ணெய்:-</u>

விடைத் தாரம், இலைக் கள்ளி, திருகு கள்ளி, சதிரக் கள்ளி, மாவிலிங்கு, சங்கங்குப்பி, தழுதழுலாம், வகுகு மத்தங் காய, குப்பை மேனி, அவுரி, நிலக் கொழுஞ் பொடுதலை, நிலக் கடம்பு, ஆமணக்கு, எருக்கு, ஆட்டாங் கொடி, நொச்சி இவைகளின் சாறு, சீரகம், கடுகு, கோரைக் கிழங்கு, குங்கிலியம், தேவதாரம், கருஞ்சீரகம் அரைத்துப் போட்டு நல்லெண்ணெயில் காய்ச்சி புண்ணுகளுக்கு போடத் தீரும்.

<u>கண்ணு வெள்ளை படர்ந்து இருக்கிறதுக்கு:-</u>

ஒரு எலுமிச்சம் பழத்தை ஊசியினால் குத்தி கயிறில் கோர்த்து அதின் மேல் 108 சிராம்பு, அந்தப் பழத்தில் குத்தி, விளாங்காய் வெண்ணெய்க்குள் புதைத்து அடியில் அடிபடாமல் தொங்க விட்டு அன்றாடம் வெவ்வேறு ஜலம் விட்டு இந்தப் படி 40 நாள் ஜலம் விட்டு எடுத்து ல்வங்கத்தை நீக்கி வெண்ணெயை செம்பு சிமிழில் அடைத்துக் கொண்டு சத்தி சாட்டறணை வேர் சாத்தால் கொஞ்சம் வெண்ணெயை மத்தித்து கண்ணுக்கு 40-நாள் வரைக்கும் போட்டு வந்தால் வெள்ளை படர்ந்திருக்கிற எல்லாம் ஓடும். கண் நன்றாய் தெரிய வரும். எல்லா ரோகங்களும் நிவர்த்தியாகும்.

<u>இதுவும் மேற்கண்ட ரோகங்களுக்கு:-</u>

வெண்ணெய் பலம்.க, பீதரோகணி பலம்.¼, எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து செ செம்பு சிமிழில் அடைத்து கண்ணுக்கு போட்டு வரத் தீரும்.

<u>கண்ணுக்கு:-</u>

வெண்ணெய் பலம்.க, மிளகு விராகனிடை.½ இவைகளை மை போல் அரைத்துக் கொண்டு கண்ணுக்கு நாள் தோறும் போட்டுக் கொண்டு வந்தால் தீரும்.

<u>நேத்திரம் இல்லாதவனுக்கு:-</u>

பசுவின் பாலை கண்ணுக்கு ஊத்தி வரவும். தும்பை பூவும், நந்தியா வட்டம் பூவும், எள்ளுப் பூவும், திப்பிலியும் சரியிடை தேன் விட்டு அரைத்து கண்ணுக்கு போட்டு வரவும்.

<u>கண்களுக்கு மருந்து:-</u>

ஓரிலைத் தாமரை வேர், பால், சங்கு, தலைஓடு , துத்தம், துருசு, சீனி கல்கண்டு, சரியிடையாய் முருங்கைப் பவு சாத்திலரைத்து கயம் செய்து முலைப் பாலில் உரைத்துக் கண்ணுக்கு 40-நாள் போட்டு வரவும் தீரும்.

<u>உடம்பு வலிகளுக்கு தயிலம்:-</u>

பொன்னாங்கண்ணி, பொற்றலைக் கரியான் சாறு, கரிசிலாங் கண்ணிச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு, நல்லெண்ணெய் வகைக்கு படி.உ, முசுமுசுக்கைச் சாறு படி.க, நெருஞ்சி சாறு படி.½, கண்டங்கத்திரிச் சாறு படி.க, முள்ளிக் கத்திரிச் சாறு படி.க, தென்னம் பூச் சாறு படி.க½, வாத நாராயணத் தழைச் சாறு படி.½, இளநீர் படி.க, மிளகு அதிமதுரம், சந்தனம், [illegible]சிப்பு, வகைக்கு பலம்.க, சீரகம் பலம்.க, மல்லி பலம்.க, கஸ்தூரி மஞ்சள் பலம்.க, விலாமிச்சம் வேர் பலம்.க, வெட்டி வேர் பலம்.க, மல்லிப்பு பலம்.க, சோம்பு பலம்.க, கல்லுப்பு பலம்.க, இவைகளை எல்லாம் பசுவின் பாலில் அரைத்து பதமாக காய்ச்சி முழுகவும்.

கண்ணில் நீர் வடியிறதுக்கு மருந்து :-

வெள்ளை சாட்டறனை வேர், தேனிலரைத்து போடவும் நீர் நிற்கும்.

கண் தெரியாதிருக்கிறதற்குப் புச்சுமை :-

மிளகு, திப்பிலி, கடுக்காய். 4, இதுகளை வெள்ளாட்டு பிச்சில் ஊறப் போட்டு எடுத்து மை போலரைத்து கயம செய்து கண்ணுக்கு போட்டு வரவும். பனம் பட்டைச் சாத்திலரைத்து போடவும்.

கண்ணுக்கு :-

தண்ணீரில் இருக்கும் சுழல் வண்டு, மிளகு, பூண்டு சரியிடையாக அரைத்து கண்ணுக்கு வெத்திலை சாத்தில் உரைத்து போட்டு வரத் தீரும். நீல காசம், பித்த காசம், மந்தார காசம், பில்வம், கண் குத்தல், நேத்திர நோவு முதலானதற்கு மருந்து :- முத்து, வெள்ளி, செம்பு, சங்கு, துத்தம், சுரூ, வெங்கலம், தலை ஒடு, பீதரோகணி, புங்கம்விரை, சரியிடையாக எலுமிச்சம் பழச் சாறு விட்டு மை போலரைத்து கயமு செய்து முலைப் பாலில் உரைத்து போடவும் தீரும்.

கண்களுக்கு தயிலம் :-

பொனாங்கண்ணிச் சாறு, சிறுகீரைச் சாறு, சீந்திக் கொடிச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு, நாரத்தம் பழச் சாறு இது வகைக்கு படி. $\frac{1}{4}$, நல்லெண்ணை படி. உ, காய்ச்சி முழுகி வரவும்.

இருடு கண்களுக்கு மருந்து :-

கண் வலி, சிகப்பு நீர் வடிதல், தினவு, கடுப்புத் தீரும். கடுக்காய், தாளிக்காய், மாசக்காய், காசுகட்டி, அபினி, வெங்காரம், படிக்காரம் வகைக்கு விராகனிடை. $\frac{1}{2}$, கருவேலங் கொழுந்து, வறப்பூலர்ங் கொழுந்து, புளியந் தளைச் சாறு விட்டு அரைத்து கண்ணை ~~சுருக்கு அடிதளர்~~ சுத்தி போட்டு வரவும். கண் பிணி வாடும். கரிய வழும் கடுக்காய், படிகாரம் சரியிடை சாறு விட்டு அரைத்து காய்ச்சி கண்ணு சுத்தி வளையம் போடவும்.

கொதிப்பு கணத்துக்கு மருந்து :-

விளக்கெண்ணை படி. $\frac{1}{4}$, எலுமிச்சம் பழச் சாறு, எலந்தை, வெங்காயம் இதுகள் சாறு வகைக்கு படி. $\frac{1}{4}$, கத்தாளைச் சோறு பலம். க, காய்ச்சி சாப்பிட அந்தி சந்தி கரண்டி வீதம் சாப்பிடவும். கணைகள் 18-ம் தீரும்.

ஊது கரப்பான் மருந்து :-

புங்கம் வேர், ஆதண்டை வேர், சங்கம் வேர், வகைக்கு ஒரு எலுமிச்சங் காய் பிரமாணம் ஈர வெங்காயம் படி. $\frac{1}{4}$, கடுகுரோகணி பலம். $\frac{1}{4}$, முடக்கொத்தான் தளை பலம். $\frac{1}{2}$ இதுகளை காய வைத்து இடித்து சூரணம் செய்து விளக்கெண்ணையில் சாப்பிடத் தீரும்.

குளிர் காச்சல் நிவர்த்தி மருந்து :-

பப்படமுகல்லுருவள்ளி தளை, அகத்தி தளை, வெள்ளருகு சமூலம், சங்கந் தளை, ஆடா தோடை தளை, மணத்தக்காளி சமூலம், ஆவாரந் தளை, சங்கங்குப்பி தளை, நிலக் கடம்பு தளை, யுன்னக்கு தளை, அமுக்லாந் தளை, நொச்சித் தளை, கல்யாண முருக்குத் தளை இதுகள் வகைக்கு ஒரு பிடி, மரமஞ்சள், நல்ல மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், இதுகளை காயப் போட்டு சூரணம் செய்து திரிகடி பிரமாணம் வெங்காயம் கடித்து விளக்கெண்ணையில் சாப்பிட 18-வகை கரப்பானும் தீரும். பாலர்களுக்கும் பெரியோர்களுக்கும் தேகம் மெலியும். சந்து, கால், கை நடுக்கல் உண்டாகும். கண்டம் வெடிக்கும். புண்சி கீறி விட்டது போல் நீர் வடியும். நாறும்.

இதுக்கு மருந்து :- பூவரசம் பட்டை, கஞ்சாங்கோரை, நல்லசீரகம், கார்போகரிசி, சடாமஞ்சி, ஏலம், இரும்பு, கரிசிலாங்கண்ணி, நுணா தளை வகைக்கு படி. உ, கொண்டு வந்து இடித்து சூரணம் செய்து நெய்யிலாவது பாலிலாவது விளக்கெண்ணையிலாவது சாப்பிட

பலவகை கரப்பானும் தீரும்.

அரி கரப்பான் மருந்து:-

புளியாரை, வல்லாரை, நீருமை, சிவகரந்தை, கொட்டைக் கரந்தை, செருப்படை, கரிசிலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, சலங்கை, பண்டு, சிறுகீரை, துத்திதழை, இசப்பைத் தழை நிலக் கொழிஞ்சி தழை, நிலாவாரைத் தழை, முளகறணை தழை, வேலிபருத்தி தழை, கிளாத்தழை உப்பு, பசலி வகைக்கு ஒரு பிடி போட்டு வசம்பு, விராலித் தழை, வகைக்கு ஒரு பிடி காய வைத்து இடித்து சூரணம் செய்து விளக்கெண்ணெயில் சாப்பிட 18-வகை கரப்பானும் தீரும்.

நாக்கிலேயும், மூக்கிலேயும், கண்ணிலேயும், புண்ணுகிறதுக்கு மருந்து:-

எருக்கந் தழை, மருக்காரைத் தழை, கிலுகிலுப்பைத் தழை, வேலிப் பருத்தித் தழை, அமுக்கிலாந்தழை, ஆடு தீண்டாத்தழை, புன்னுக்கு, பூண்டு, ஆதண்டைத் தழை, ஆவாரந்தழை, கோவைத்தழை, நிலாவாரைத் தழை, கிலுவை தழை, சிறுகீரைத் தழை, விஷ்ணு காந்தி, மழம்பாசி, நன்னாரிவேர், பொடுதம்பித் தழை, முடக்கொத்தான் தழை, நெல்லித் தழை, கடுக்காய்த் தழை, வேலாந்தழை, கோயில் கீரைத் தழை சரியிடையாக சூரணம் செய்து சர்க்கரை கலந்து பாலில் சாப்பிடத் தீரும்.

வாய்வு சூலைக்கு மருந்து:-

சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, ஓமம், வகைக்கு பலம்.உ, சூரணம் செய்து திரிகடி பிரமாணம் தேனில் சாப்பிட நன்மை தரும்.

ஆனந்த வாய்வுக்கு விபரம்:-

தும்பைத் தழையை சூரணம் செய்து எலுமிச்சம் பழச் சாற்றில் சாப்பிடத் தீரும். இதுவும்:- 16 எருக்கிலைக்குள் தோல் நீக்கிய வெள்ளைப் பூண்டை பலம்.ஞ வைத்து மூடி இலை வெந்த பக்குவத்தி லெடுத்து மேற்கண்ட இலைச் சாறும் பிழிந்ததில் மேற்கண்ட பூண்டை அறுத்து குழைத்து இப்படி மூன்று தடவை சாப்பிடத் தீரும்.

பித்த வாய்வுக்கு மருந்து:-

கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கோரைக்கிழங்கு, சிறுநாகப்பூ, தானிக்காய், நெல்லிக்காய் வகைக்கு பலம்.$\frac{1}{2}$, சிவதை பலம்.$\frac{1}{2}$ இடித்து சூரணம் செய்து தேனில் சாப்பிட நன்மை உண்டாகும்.

வாய்வுக்குத்துக்கு:-

சித்திர மூலம்பட்டை, பிரப்பங் கிழங்கு, சுக்கு சரியிடை கசாயம் செய்து சாப்பிடத் தீரும். ஆனந்த வாய்வுக்கு இசப்பைப் புண்ணாக்கை கால் படி, ஈர வெங்காயச் சாற்றில் ஊறப் போட்டு வடித்து அரைத்துச் சாப்பிடத் தீரும்.

பித்த வாய்வுக்கு மருந்து:-

கடுக்காய் பலம்.க, திப்பிலி பலம்.க, சுக்கு பலம்.க, சீரகம் பலம்.க, இந்துப்பு பலம்.க, நம்சுக்கு மூலம் பலம்.க, பனைவெல்லம் சேர்.உ, சூரணம் செய்து இடித்து லேகியம் செய்து சாப்பிட நன்மை தரும்.

பித்த வாய்வுக்கு:- சீரகம், அதிமதுரம், கருஞ்சீரகம், சோம்பு பட்டை, சதகுப்பை, வகைக்கு பலம்.க, மல்லிகை பலம். இடித்து சூரணம் செய்து சர்க்கரை.ய, பலம் கூட்டி திரிகடி பிரமாணம் வெந்நீரில் சாப்பிடத் தீரும்.

அரி கரப்பான் மருந்து:- ஆலாங் கீரை, புளியாரை கொட்டைக் கரந்தை, செருப்படை, கரிசிலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, தும்பை, துளசி, சிறுகீரை, விலாறி, நிலக் கொழிஞ்சி சலங்கை பண்டு, முளகறணை, வேலிப்பருத்தி, வசம்பு, உப்பு, பசலி வகைக்கு பலம்.$\frac{1}{2}$. சூரணம் செய்து விளக்கெண்ணெயில் சாப்பிடத் தீரும்.

அரி கரப்பானுக்கு எண்ணெ:-

எருக்கு, மருக்காரை, சலங்கைப் பண்டு, வேலிப் பருத்தி, இவைகள் சாறு வகைக்கு படி.1/ வீதம் பிழிந்து சேர்க்கவும். கடுக்காய், வசம்பு, பண்டு வகைக்கு பலம்.$\frac{1}{4}$,

அரைத்து போட்டு நல்லெண்ணெயில் காய்ச்சி 3 -நாள் 6 வேளை பூசத் தீரும்.

கரப்பானுக்கு மருந்து :- 24.9.63,

நாவலை, ஓரிலைத் தாமரை, வெள்ளருகு, சித்திரமூலம், நிலக் கொளிஞ்சி, இதுகளின் வேர்கள் கருஞ்சீரகம், கெந்தகம், கார்போகரிசி, ஓமம், சீரகம், கல் பாசி, வகைக்கு பலம்.க, சூரணம் செய்து நல்லெண்ணெயில் போட்டு காய்ச்சி மேலே பூசவும்.

சொறி சிரங்கு மருந்து :-

புங்கங் கொட்டை, மரமஞ்சள், வெம்பாடம் பட்டை, அவுரி வேர், துருசு, கெந்தகம், தாளகம் வகைக்கு கால் பலமாக அரைத்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி, காலையில் உடம்பில் தடவி மாலையில் முழுகவும் தீரும்.

சிறு சிரங்குக்கு :-

ஊசி பொரும்பி சாறு படி.½, விளக்கெண்ணெ படி.½, மிளகு, செங்கத் தாரிப் பட்டை, சிறுகுறிஞ்சா வேரு வகைக்கு பலம் அரைத்து போட்டு காய்ச்சி சாப்பிடத் தீரும்.

சிறு தினவு பிப்புக்கு :-

விளக்கெண்ணெ படி.க, கற்பூர வல்லித் தழைச் சாறு, படி.½, சிறுசெருப் படைச் சாறு, நாயுருவித் தழைச் சாறு, வெங்காயச் சாறு வகைக்கு படி.க, காய்ச்சி சங்களவு சாப்பிட எல்லாத் தினவு சிரங்குந் தீரும்.

சொறி சிரங்குகளுக்கு :-

பூவரசம் பட்டை பலம்.க, கெந்தகம் பலம்.½, சித்திரமூலம் பலம்.ங, நல் லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி உடம்பில் தடவி வரவும்.

சிரங்கு தினவுக்கு :-

ஏலம், மிளகு, கார்போகரிசி, பிரும்பட்டை, கெந்தகம், கற்பூரம் வகைக்கு பலம்.¼, வீதம் அரைத்து நல்லெண்ணெ படி.½ காய்ச்சி உடம்பில் பூசவும்.

பேய்ச் சொறிக்கு :- இந்துப்பை அரைத்து நெய்யில் போட்டு வெய்யிலில் வைத்து மேலே பூசத் தீரும்.

ஆதண்டை தயிலம் :-

சிரக சூலை, சூதக வாய்வு, மாத சூலை, திமிர் வாய்வு, இழுப்பு, இரைப்பு, வயத்திலுள்ள வாய்வு, சிறு கடுகடுப்பு, நேத்திரம், பித்து சொறி சிரங்கு, ரணங்கள் தீரும்,

ஆதண்டை தழை, சங்கந் தழை, எருக்கந் தழை, சித்திரமுட்டி தழை இவ்வைகளின் சாறு படி.1/8, நல்லெண்ணெ படி.க, வேப்பெண்ணெ படி.½, சுக்கு, மிளகு, திப்பிலி ஓமம், பூண்டு, வசம்பு, ஏலம், மஞ்சள் வகைக்கு பலம்.க, அரைத்துப் போட்டு காய்ச்சி முழுகத் தீரும்.

துளசித் தயிலம் :-

துளசி சாறு படி.¼, முருங்கைத்துப் பச்சை சாறு படி.¼ ஆவின் நெய் படி.¼, நல்லெண்ணெ படி.¼, விளக்கெண்ணெ படி,¼, ஒன்றாய்க் கலந்து அதில் மஞ்சள், மர மஞ்சள், கோரைக்கிழங்கு, வெட்டி வேர், விலாமிச்சை வேர், கடுக்காய்ப்பூவு, சீரகம், லவங்கப் பட்டை, வலம்புரிக்காய், சாதிக்காய், தக்கோலம், சடாமஞ்சி, ஓமம், பறங்கிப் பட்டை, செண்பகப்பூ, கசகசா, அதிவிடையம், கடுகுரோகணி, பீதரோகணி, தேவதாரம், சந்தனக் கட்டை, அபினி, சிறுநாகப்பூ வகைக்கு விராகனிடை.க ஆவின் பால் விட்டுஅரைத்து காய்ச்சி முழுகி வர க்ஷயம், காசம், பீனிசம், குன்மம், சிறுநீர், மண்டையிடி, சூலை, காது மந்தம், கண் புகைச்சல், தேகவலிகள் தீரும்.

<u>வீக்கத்திற்கு:-</u>

தேத்தாம் விரை, சந்தனம், மான் கொம்பு, வெங்காரம், வெல்லம், சரியிடை ஆக அரைத்து இளநீரில் சாப்பிடத் தீரும். திப்பிலி, கடுகுரோகணி, மாதுளந் தோல், நெல்லுப் பொரி சமனாகச் சூரணம் செய்து திரிகடி பிரமாணம் தேனில் குழைத்து சாப்பிடத் தீரும்.

<u>குன்மத்திற்கு:-</u>

இஞ்சி, சிவதை, சீந்தி, நிலாவாரை, சித்திரமூலம், கழச்சி, முடக்கொத்தான் சமூலம் ஆட்டி சாறு படி.½, விளக்கெண்ணெய் படி.½, அதில் காய்ச்சி சாப்பிட குன்மம் எட்டும் தீரும்.

இதுவும்:- சித்திரமூலம், புளலி தண்டு, நிலாவாரை, குமரி வேரு வகைக்கு பலம்.உ, ஆட்டி பனைவெல்லத்தில் போட்டு லேகியம் கிளறி, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு வகைக்கு பலம்.க, பண்டு பலம்.5, ஆட்டி போட்டு லேகியம் செய்து சாப்பிடக் குன்மம் தீரும்.

<u>ஆறாத புண்ணுக்கு:-</u>

ஆமணக்கு யிரை, சங்கம், யிலை, இலுப்பைப் பட்டை, நாகப்பட்டை, கள்ளிப் பட்டை, வசம்பு, வெங்காரம், சரியிடை தூள் செய்து விளக்கெண்ணெய் பூசி மேலே போடவும்.

சிரங்குகளுக்கு:- கோவைக் கிழங்கும், கெந்தகமும் சரியிடை அரைத்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சிப் பூசி, இலுப்பைத் தண்ணீர் அரைத்துத் தேய்க்கவும். வேப்பிலையும் அரைத்துத் தேய்க்கவும்.

<u>சத்தி குன்மம், எரிகுன்மம், வலிகுன்மம், சூலை குன்மம், கபால குன்மம் இவைகளுக்கு மருந்து</u>

பறங்கிப் பட்டை பலம்.4, சித்தரத்தை, சிறுநாகப்பூ, சுக்கு, சிறுதேக்கு, சீரகம், திப்பிலி, தாளிச பத்திரி, தேசாவரம், கருஞ்சீரகம், கோஷ்டம், வால் மிளகு, அதிமதுரம், ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, சதகுப்பை, குங்குமப்பூ, சடாமஞ்சி பட்டை, மல்லை, மலைதாங்கி, தானிக்காய், கடுக்காய், நெல்லிக்காய், அமுக்குலாம், சித்திரமூலம், மிளகு, கிராம்பு, சிவனார் வேம்பு, வேப்பம் பட்டை, கோரைக் கிழங்கு, நிலப் பனைக் கிழங்கு வகைக்கு பலம்.½ சூரணம் செய்து சர்க்கரை கூட்டிச் சாப்பிடவும்.

<u>மாந்தம், கணம், சன்னிக்கு:-</u>

மாசக்காய், கோரோசனை, திப்பிலி, கருஞ்சீரகம், அக்கலாக்காரம், சமனாக அரைத்து முலைப் பாலில் சாப்பிடத் தீரும்.

<u>விஷ தோஷம், சன்னி, குளிர் சுரம், சன்னி விக்கலுக்கு:-</u> மஞ்சள், சாதிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, கிராம்பு, ஏலம், நாவிக் கிழங்கு, வகைக்கு விராகனிடை.க, எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து சிறு உருண்டை செய்து மாசி பத்திரி கசாயத்தில் ஊத்தவும். சளி

<u>சளி, இருமல், காச்சல், விஷக் காச்சல், விச்சுளி காச்சல், வலிப்பு தோஷம் சன்னி தோஷம், வயிறு பொருமலுக்கு:-</u>

சாதிக்காய், கிராம்பு, ஓமம், கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி, கஸ்தூரி மஞ்சள், வசம்பு, பெருங்காயம், வெள்ளைக காக்கட்டமும் வேர், மை போல அரைத்து சுண்டைப் பிரமாணம் உருண்டை செய்து வென்னீரில் அரைத்து ஊத்தவும் தீரும்.

<u>சகல சன்னிக்கு:-</u>

ஏலம், கிராம்பு, அதிமதுரம், வெட்டி வேர், நன்னாரி, சுக்கு, திராட்சை, பேரீச்சம், விலாமிச்சம், தாளிச பத்திரி, கோரோசனை, நிலப்பனைக் கிழங்கு, சடாமஞ்சி, சந்தனம், தேவதாரம், திப்பிலி, இலுப்பைப் பூவு, கடுகுரோகணி, வகைக்கு விராகனிடை.க, தண்ணீர் விட்டு அரைத்து உருண்டை செய்து முலைப் பாலில்

மூலைப் பாலில் சாப்பிடத் தீரும். முதியார் கூந்தலில் இந்தக் கசாயத்தில் சாப்பிடத் தீரும்.

தீராத சன்னிக்கு:-

சிறுவிளாந்தளை, வெள்ளைப் பூண்டு, வசம்பு, ஓமம் வகைக்கு பலம்.க இடித்து சூரணம் செய்து அரைத்து உருண்டை செய்து ஊத்தவும். மேற்கண்ட அதே மருந்தை வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சிப் பூசவும்.

பிற இசிவுக்கு:-தும்பை, துளசி, இஞ்சி சரியிடை உருண்டை செய்து மூலைப் பாலில் ஊத்தவும்.

சன்னிகளுக்கு:- நல்ல வேளை வேரு, ஊத்தாமணி வேரு, மாவிலிங்கம் பட்டை, முருங்கைப் பட்டை வகைக்கு ஒரு பலம், சுக்கு, மிளகு, திப்பிலி இதுகள் வகைக்கு ஒரு பலம் இடித்து அரைத்து குளிகை செய்து கொடுத்து வந்தால் உடனே நீங்கும்.

அகோரமான சன்னிக்கு:-

வுரி, ஊமத்தங்காய்ச் சாறு, முத்தின வேப்பம் பட்டைச் சாறு, கோவை வேர்க் கிழங்கு, நீர்முள்ளி, சிவனார் வேம்பு, கல்யாண முருங்கை, வெள்ளைச சாட்டரணை வேர், முடகொத்தான் வேர் சரக்கு வகை ஏலம், சீரகம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, பெருங்காயம் வகைக்கு பலம்.½ இடித்து சூரணம் செய்து மூசுரு முட்டை சேர்த்து அரைத்து குளிகை செய்து நொச்சியிலை சாறு விட்டு அரைத்து குளிகை செய்து சாப்பிட தீரும்.

ஆலாம், நாவல், மாந்துளிர், சரியிடை அரைத்து உருண்டை செய்து சாப்பிட விக்கல், தாகம், அதிசாரம் தீரும். ~~வாந்தி~~*

வாந்தி, இருமல், விக்கல் சுரம் தீர மருந்து:-

கண்டங் கத்திரிப் பழம், அழுக்குலாங் கிழங்கு, திப்பிலி, சரியிடை சூரணம் செய்து கடிகை பிரமாணம் சாப்பிட விக்கல், வாந்தி, காச்சல், இருமலும் தீரும்.

சன்னிகளுக்கு:- கஞ்சாங்கோரை, ஊமத்தந் தளை, நாரத்தந் தளை, கோரைக்கிழங்கு, வேப்பம் பட்டை சரியிடை இடித்து நெருப்பில் புகை பிடிக்கத் தீரும்.

மூல வாய்வு, மூல உருண்டை, அன்னம் செமியாதிருக்கிறது, கிருமிகளுக்கு மருந்து:-

நூறு கடுக்காய், வெள்ளாட்டுக் கோமியத்தில் வேக வைத்து காய வைத்து வறுத்து இடித்து சூரணம் செய்து சிவதை சித்திரமூலம், மஞ்சள், சுக்கு, திப்பிலி, செங்கொட்டை சுத்தி செய்து, போடவும். எள்ளு, நிலாவாரை, நிலவாகை, கருணை கிழங்கு, பிரண்டை கிழங்கு, கோவைக் கிழங்கு, சாட்டரணைக் கிழங்கு வகைக்கு பலம்.உ, பாலில் வேக வைத்து காய வைத்து இடித்து சூரணம் செய்து கொண்டு கடுகு பலம்.4, வெள்ளாட்டுப் பால் ஒரு படி, நாட்டு சர்க்கரை பாகு செய்து மேற்கண்ட சூரணத்தை போட்டு லேகியம் கிளறி ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் வியாதிகள் தீரும். மல சலமும் தாராளமாகப் போகும். தீபன சக்திகள் உண்டாகும். கிருமி பூச்சிகள் அற்றுப் போகும். பசி நன்றாய் உண்டாகும். தாது விர்த்தி ஆகும். ~~கிருமி பூச்சிகள் அற்றுப் போகும்~~,

ஆம குணத்துக்கு மருந்து:-

இண்டந் தண்டு சாறு படி.½, குமருந் தளை சாறு மாசி பத்திரிச் சாறு, கஞ்சாங் கோரைச் சாறு, கருமுட்டித் தளை சாறு, வெங்காயச் சாறு, முடக் கொத்தான் சாறு, தூதுவளைச் சாறு, நொச்சாறு, வல்லாரைச் சாறு வகைக்கு சாறு படி.1/8, விளக்கெண்ணை படி.க, இடித்து சூரணம் செய்து காய்ச்சி.4 நாள் 10 வேளை சாப்பிடத் தீரும்.

வேலிப் பருத்திச் சாறு, கோவையவரைச் சாறு, கிரவைப் பட்டை சாறு, பொடுதளைச் சாறு, கள்ளிப் பழுப்பு, சசி சிவதை, விலாம்பிசின் வசம்பு, வெங்காரம் கடுகுரோகணி, சீரகம், கருஞ்சீரகம் வகைக்கு விராகனிடை.உ அரைத்து விளக்கெண்ணையில் போட்டு காய்ச்சி ஊத்தவும் தீரும்.

பித்த காச்சல், பழைய காச்சல், தாக காச்சல் இவைகளுக்கு மேலே பூச எண்ணெ

ஆவின் நெய், ஆவின் பால், நல்லெண்ணெ, தும்பைச் சாறு, அதிமதுரம் நன்னாரி வே வேலாந்தளே, கடுகுரோகணி, செவ்வள்ளிக் கொடி, அமுக்குலாம் வேர், மரமஞ்சள், சநதனம், சுக்கு, காசுக்கட்டி, அரக்கு, கோஷ்டம் வகைக்கு விராகனிடை.க, காய்ச்சி உச்சயிலும் உடம்பிலும் பூசத் தீரும்.

அதிசார சுரம், காச்சல், சுவாசம், வாந்தி, சுரம், தாகம், விக்கல், தாகம் நிவர்த்தி

மான் கொம்பு அதிவிடையம், திப்பிலி, சமனிடை சூரணம் செய்து தேனில் திரிகடி பிரமாணம் கொடுக்கத் தீரும்.

சகல காச்சலுக்கு பச்சைக் கற்பூர மாத்திரை:-

பச்சைக் கற்பூரம் விராகனிடை.க, கருவப் பட்டை விராகனிடை.க, சாதிக்காய் விராகனிடை.க, நேர்வாளம் விராகனிடை.3, குமரிச் சாத்திலரைத்து, சிறு உருண்டை செய்து சர்க்கரையில் சாப்பிடத் தீரும்.

குளிர் காச்சலுக்கு:- குப்பை மேனித் தளை, சித்திரமூலம் தளை, மிளகு சமனாக அரைத்து கொடுக்கத் தீரும்.

இதுவும்:- ஓடு /தீண்டாப் பாளை வேர், கருவப் பட்டை சமன் கூட்டி எலுமிச்சஞ் சாறு விட்டு அரைத்தது பஜனமதிக் கொட்டை பிரமாணம் உருண்டை செய்து மல்லி கசாயத்தில் சாப்பிடத் தீரும்.

கணக் காச்சலுக்கு:- வறப்புலாந் தளை, வில்வத் தளை, சித்தமுட்டி தளை, விஷ்ணு காந்தி, நன்னாரி வகைக்கு பலம்.க, மிளகு பலம்.க, அரைத்து உருண்டை செய்து 12 நாள் வென்னீரில் சாப்பிடத் தீரும்.

தீராத காச்சலுக்கு:-

வமிளம் வேர், நன்னாரி வேர், தாமரை, இலுப்பைப் பூ, முந்திரி பழம், வெட்டி வேர், விலாமிச்சை, கோரைக் கிழங், இஞ்சி, காஞ்சிரந் தளை, அதிமதுரம் சரியிடை சூரணம் காச்சலுககு சாதிலிங்க மாத்திரை சாப்பிட நன்மையுண்டாகும்.

லிங்கம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.உ, ஆவின் பாலிலரைத்து பயறளவு உருண்டை செய்து இஞ்சி சுரசம் செய்து அதில் உரைத்துக் கொடுக்கத் தீரும்.

இதுவும்:- லிங்கம் விராகனிடை.க, தாளகம் விராகனிடை.க, மனோசிலே விராகனிடை.க கறணை கிழங்கில் துளை செய்து 3-க்கு 3 துளை செய்து அதில் ஒவ்வொன்றையும் வைத்து மூடி சீலே மண் செய்து உமி படி.உ, அதில் சேர்த்து வெந்த பிறகு எடுத்து சுக்கு விராகனிடை.3, சேர்த்து வேலிப் பருத்தி யிலரைத்து சேர்த்து அரைத்து குளிகை செய்து சுடு தண்ணீரில் உரைத்துச் சாப்பிட மிளகு கசாயத்திலரைத்து கொடுக்கத் தீரும்.

காச்சல், குளிர் காச்சல், வயறு பொருமல் முதலானதற்கு:-

விரோசன மாத்திரை கொடுக்க நன்மை தரும். சுக்கு, மிளகு, திப்பிலி. கடுகுரோகணி, கடுக்காய். இந்துப்பு ரசம் வகைக்கு விராகனிடை.க, நேர்வாளம் பருப்பு விராகனிடை.எ, இதுகளை எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை செய்து வென்னீரில் சாப்பிட தீரும்.

விஷபாக சுரத்திற்கு நிவர்த்தி:- நெருஞ்சி, விழும்பி, நிலக்கடம்பை, சிறுபூளை, அமுக் கிலாம். நன்னாரி, குமிளம், சீந்தி, மூன்னை, நிலாவாரை, சிறவழுதளை, காஞ்சொறி, சித்தமுட்டி, முடக் கொத்தான் நீர்முள்ளி, விலாமிச்சம் வேர், பற்படாகம், தாமரை சன்ன லவங்கப் பட்டை, அரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி, மட்ட தெசாவரம், செவியம், சித்திரமூலம், கோஷ்டம், சிறுதேக்கு, தேவதாரம், கோரைக்கிழங்கு வகைக்கு தோலா.க இது கசாயம் செய்து இதில் கொஞ்சம் சூரணம் எடுத்து கசாயத்துடன் கலந்து சாப்பிட 12 நாள் சாப்பிட நல்லது ஆகும்.

~~சகல காச்சலுக்கு மருந்து:-~~

சகல காச்சலுக்கு மருந்து:-

திப்பிலி மூலம் பலம்.க, திப்பிலி பலம்.க, செவியம் பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, கொத்தமல்லி பலம்.க, பேய்ப்புடல் பலம்.க, கடுக்காய் பலம்.க, நெல்லி வத்தல் பலம்.க, நொச்சித் தளை பலம்.4 இவைகளை இடித்து ஆட்டிச் குளிகை செய்து கழச்சிக் காய் பிரமாணம் உருட்டிக் கொடுக்கவும்.

விடாத காச்சலுக்கு நிவர்த்தி:-

அருகம் வேர் பலம்.உ, கெட்டி மிளகு பலம்.க, அதில் சுண்ணாம்பு பலம்.½ இவைகள் இடித்து அரைத்து கழற்காய் பிரமாணம் உருண்டை செய்து வெந்நீரில் சாப்பிடத் தீரும்.

மூன்றும் முறைக் காச்சலுக்கு:-

கண்டு பரங்கி பலம்.க, பற்படாகம் பலம்.க, கோரைக் கிழங்கு பலம்.க, சீந்தி தளை பலம்.க, நன்னாரி வேர் பலம்.க, காஞ்சிரம் சமூலம் பலம்.க, தேவ தாரம் பலம்.க, கோஷ்டம் பலம்.க, பேய்ப்படல் பலம்.க அரைத்து குளிகை செய்து சுடு தண்ணீரில் சாப்பிட தீரும்.

நாக்கு வறவறப்பு காச்சல் தீர மருந்து:-

வில்வ வேர், விலாமிச்சம் வேர், நெருஞ்சி வேர், நன்னாரி வேர், அதிமதுரம், வால் விளஅரிசி, சோம்பு, மூத்தக் காசு, நெல்பொரி, மூந்திரி பழம், நெல்லி வத்தல், இலுப்பைப்பூ, சுக்கு சரியிடை தட்டி கசாயம் செய்து சாப்பிடத் தீரும்.

தாக சுரத்திற்கு:-

காச்சலுக்கும் தீரும். சித்தமுட்டி, பேராமுட்டி, காஞ்சொரி, சிறுகீரை, நன்னாரி, பொன்னாங்கண்ணி, ஆவாரை, நிலவேம்பு, கோரைக் கிழங்கு, சிறுதேக்கு, கொத்தமல்லி, சரியிடையாக இடித்து அரைத்து குளிகை செய்து வெந்நீரில் சாப்பிடத் தீரும். இரவிலும் பகலிலும் கொடுக்கவும்.

ஒரு நாள் விட்டு ஒரு நாள் வருகிற காச்சலுக்கு:-

பற்படாகம், பேய்ப்படல், அதிமதுரம், சீந்தி தண்டு, தும்பை வேர், கோரைக் கிழங்கு, கொத்தமல்லி, சுக்கு, சரியிடையாக அரைத்து சூரணம் செய்து அந்தி சந்தி சாப்பிட நீங்கும்.

சு.ச.24.9.63.

****

முற்றும்

****

Verified and compared completed on 8/10/63
Sundaram... 8.10.63

131

121